விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

பக்கங்கள்: இருபது Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஆடி 14 ஞாயிற்றுக்கிழமை (29.07.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 223

## மன்னார் நீதவான் வீட்டின் மீது இனந்தெரியாதவர்கள் தாக்குதல்!

### கல் வந்தபின் வந்தது காவல்துறை

(மன்னார்)

மன்னார் நீதவான் அந்தோனிப்பிள்ளை ஜுட்சனின் வீட்டின் மீது இனந்தெரியாதோர் நேற்று தாக்குதல் நடத்தியுள்ளதாக தகவல்கள் தெரிவித்துள்ளன.


மன்னார் செபஸ்தியார் வீதியில் இந்த இல்லம் அமைந்துள்ளதாகவும் இந்த இல்லத்தை நீதவான் வாடகைக்கு விட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வீட்டின் மீது கற்கள் வீசி எறியப்பட்டுள்ளதாகவும், இதனால் வீட்டுக்கும் வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்களுக்கும் சிறு சேதங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

(19ஆம் பக்கம் பார்க்க)

## ராஜீவ் காந்தி-ஜெயவர்த்தனவால் அடையப்பட்டது எதுவுமில்லை!

### சுட்டிக்காட்டுகிறார் கேணல் ஹரிகரன்



(கொழும்பு)


ராஜீவ் காந்தி-ஜெயவர்த்தன உடன்படிக்கை ஏற்படுத்திக் கொள்ளப்பட்டு 25 வருடங்கள் கடந்த பின்னரும், அதனால் அடையப்பட்ட இலக்குகள் எவையும் கிடையாது என்று கேணல் ஹரிஹரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்திய அமைதிகாக்கும் படையினர் இலங்கையில் இருந்த காலப்பகுதியில் அதற்கு தலைமை வகித்தவரும், இந்திய இராணுவ முன்னாள் புலனாய்வு பிரிவின்

(20ஆம் பக்கம் பார்க்க)

# லண்டனில் புலிக்கொடி தாங்கி

# புலம்பெயர் தமிழர்கள் போராட்டம்




## ஒலிம்பிக் ஆரம்ப நிகழ்வில் இலங்கை ஜனாதிபதி இல்லை

(லண்டன்)

லண்டன் ஒலிம்பிக் போட்டிகளின் தொடக்க நாளான நேற்று ஒலிம்பிக் விளையாட்டரங்குகள் அமைந்திருக்கும் கிழக்கு லண்டன் பகுதியில் மூன்று இடங்களில் நடைபெற்ற கவனயீர்ப்பு நிகழ்வுகளில் பெருமளவிலான புலம்பெயர் தமிழ்மக்கள் கலந்து கொண்டனர்.

(19ஆம் பக்கம் பார்க்க)

## ஒலிம்பிக் போட்டியிலும் இலங்கைக்கு இக்கட்டு

(லண்டன்)

2012 லண்டன் ஒலிம்பிக் போட்டிகளிலிருந்து இலங்கை போட்டியாளர்களை பங்கு கொள்ளாமல் செய்வது மட்டுமின்றி அவர்களை வெளியேற்ற வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தமிழர்களுக்கு எதிரான மனித இனப் படுகொலையில்

(19ஆம் பக்கம் பார்க்க)

## பாக்.அமைச்சரின் விஜயம் ஒத்திவைப்பு

(கொழும்பு)

பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் ஹினா ரப்பானி காரின் இலங்கை விஜயம் காலைவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

(19ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத்தமிழனுக்கு சம உரிமை கோரி மீண்டும் இன மோதல் வெடிக்கும்!

### அமைதித் தூதுவர் அதிரடிப் பேட்டி

(புதுடில்லி)

இலங்கையில் தமிழர்களுக்கு சம உரிமை வழங்காவிட்டால் மீண்டும் இன மோதல் புதிய வடிவத்தில் வெடிக்கும் என்று நோர்வேயின் முன்னாள் அமைதித் தூதரான எரிக் சொல்ஹெய்ம் கூறியுள்ளார்.

வெளிநாட்டு ஊடகமொன்றிற்கு அளித்த நேர்காணலிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

மேலும் இலங்கையில் 30 ஆண்டுகால ஆயுதப் போராட்டத்திற்கு தமிழர் பிரச்சினையே காரணமாகவிருந்தது. தமிழீழ விடுதலைப் புலிகளை இராணுவம் தோற்கடித்த பிறகும் அப்பிரச்சினை

(19ஆம் பக்கம் பார்க்க)

## 'இலங்கை கடற்படை எங்களை நாயைப் போல மோசமாக நடத்தியது'

### தமிழக மீனவர்கள் குமுறல்

(சென்னை)

இலங்கையிலிருந்து விடுதலையாகி நேற்றுக்காலை இராமேஸ்வரம் திரும்பிய தமிழக மீனவர்கள் தங்களை இலங்கைக் கடற்படையினர் அடித்து உதைத்து சித்திரவதை செய்ததாக கண்ணீர் மல்க தெரிவித்தனர்.

கடந்த 21ஆம் திகதி கச்சதீவு பகுதியில் மீன் பிடித்துக்கொண்டிருந்த இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 23 மீனவர்களை இலங்கை கடற்படையினர் பிடித்துச் சென்றனர்.

இந் நிலையில் மத்திய, மாநில அரசுகளின் கடும் முயற்சிக்கு பிறகு நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட்ட மீனவர்கள் 23 பேரும், நேற்றுக்காலை

(19ஆம் பக்கம் பார்க்க)

## சம்பூரில் அணுமின் நிலையமா? ஊடகங்கள் கூறுவது பொய்!

### மறுக்கிறார் சம்பிக்க ரணவக்க



(கொழும்பு)

திருகோணமலை சம்பூரில் அணுமின் நிலையமொன்றை அமைப்பதற்கு பாகிஸ் தானின் உதவியை இலங்கை பெறவுள்ளதாக இந்திய ஊடகங்கள் பொய்யான செய்தியை வெளியிடுவதாக மின்சக்தி வலுசக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க கூறியுள்ளார்.

சீனாவின் செல்வாக்கிற்குள் இலங்கையை வைத்திருப்பதற்காக இத்திட்டத்தை பாகிஸ்தான் வடிவமைத்துள்ளதாக இந்தியா ருடே இணையத்தளத்தில் கடந்த யூலை 24ஆம்

(19ஆம் பக்கம் பார்க்க)

## சீன அமைச்சரின் இலங்கை வரவால் இந்தியாவிற்கு பெரும் அதிர்ச்சி!

### இங்கு தலையீடு ; அங்கு தலையிடி

(கொழும்பு)

இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் தொடர்பிலான அதிருப்தி வலுத்துவரும் தற்போதைய சூழ்நிலையில், சீன பாதுகாப்பு அமைச்சர் லியாங் க்வாங்லீ அடுத்த வாரம் கொழும்பு வரவிருப்பது இந்தியாவுக்கு பெரும் அதிர்ச்சியை கொடுத்திருப்பதாக இந்தியாவின் உயர்மட்ட ராஜதந்திர வட்டாரங்களை மேற்கோள்காட்டி இந்திய ஊடகங்கள் செய்திவெளியிட்டுள்ளன.

அடுத்த வாரம் இலங்கைக்கு வரும் சீனப் பாதுகாப்பு அமைச்சர் கொழும்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய

(20ஆம் பக்கம் பார்க்க)

சிங்கர் அறிமுகப்படுத்தும் அதிசிறந்த உறுதியான மோட்டர் சைக்கிள்கள்

SAFARI

72 CC 4 ஸ்ட்றோக் என்ஜின்
மின்சார, கிக் ஸ்ராட்
அலோய் சில்லு
சிவப்பு, நீலம், கறுப்பு, சில்வர் வர்ணங்களில்

GALAXY 100

100 CC ஸ்கூட்டர் 4 ஸ்ட்றோக் என்ஜின்
மின்சார, கிக் ஸ்ராட்
அலோய் சில்லு
டிஸ்க் பிறேக்
சிவப்பு, நீலம், கறுப்பு வர்ணங்களில்

CAMY 80

80 CC ஸ்கூட்டர் 4 ஸ்ட்றோக் என்ஜின்
மின்சார, கிக் ஸ்ராட்
அலோய் சில்லு
டிஸ்க் பிறேக்
பாதுகாப்பு அலாம் மணி
சிவப்பு, நீலம், கறுப்பு வர்ணங்களில்

SUPER CUP

4 Stroke 90cc Air Cooled Engine
Starting System : Electric/ Kick
Detachable Rear Seat
Alloy Wheels
Drum Brakes
Colours: RED/BLACK / GREEN

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். சுன்னாகம். மானிப்பாய். சங்கானை, நெல்லியடி. சாவகச்சேரி, கிளிநொச்சி

⇨ தவணைக் கொடுப்பனவு முறையிலும் பெற்றுக்கொள்ளலாம்

சிங்கர் – யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# சுயதொழில் நிவாரணக்கடன் நாளை அலரி மாளிகையில்

(யாழ்ப்பாணம்)

புனர்வாழ்வு அதிகார சபையினால் தெரிவு செய்யப்பட்ட பயிலுநருக்கான சுய தொழில் நிவாரண கடன் காசோலை வழங்குதல் தொடர்பான நிகழ்வு நாளை பிற்பகல் 2 மணிக்கு அலரி மாளிகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வுக்கு செல்லவுள்ள நிவாரண கடன் பெறுவதற்காக தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் தம்முடன் குடும்ப உறுப்பினர் ஒருவரை அழைத்து வரலாம் எனவும் இன்று பிற்பகல் 5 மணிக்கு முன்னதாக பயண ஒழுங்குகளுடன் மாவட்டச் செயலகத்திற்கு சமுகமளிக்குமாறு மேலதிக அரச அதிபர் ரூபினி வரதலிங்கம் அறிவித்துள்ளார்.

இவர்களுக்கான போக்குவரத்து, தங்குமிட வசதிகள் மாவட்ட செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-8)



மன்னார் காத்தன் குளம் பகுதியில் யுத்தத்தினால் அநாதரவாக்கப்பட்ட சிறுவர்களுக்கான இல்லம் ஒன்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவினால் நேற்று சனிக்கிழமை திறந்துவைக்கப்பட்டுள்ளது.


## உடனடி வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் புதிதாக திறந்துள்ள எமது 04 ஆவது கிளை நிறுவனமான One World Innovage Companyக்கு பின்வருவோர் தேவைப்படுகின்றனர். Distributor,Supervisor,Asst. manager(Admin.Officer)

குறைந்த பட்ச தகைமை க.பொ.த.(சா/த)

ஆறு மாத கால பயிற்சியின் போது 12000-18000 வரை பெற முடியும்

பயிற்சி முடியும் பட்சத்தில் 35000-45000வரை பெறமுடியும்.

உடன் தொடர்பு கொள்ளவும்
077-6057421 , 077-5574795

(113)


## அது வருகுது ; இது போகுது

(யாழ்ப்பாணம்)

க.பொ.த. உயர்தரப் பரீட்சை நெருங்கிக் கொண்டிருக்கின்ற வேளையில் அடிக்கடி இரவு வேளைகளில் தடைப்படும் மின்சாரங்களினால் பரீட்சைக் குத்தோற்றும் மாணவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாவதாக தெரிவிக்கப்படு கின்றது.

தடைப்படும் மின்சாரத்தினால் தாம் சாச்சர் லைட்டுக்களையும், லாம்புகளையும் நம்பி படிப்பைத்தொடர வேண்டியுள்ளதாகவும் மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் இவ் மின்வெட்டை முடிந்த வரையில் பகல் வேளைகளில் மட்டும் நடைமுறைப் படுத்த உரியவர்கள் ஆவணசெய்ய வேண்டும்எனவும் அவர்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர். அடுத்த ஓகஸ்ட்மாதம் முற்பகுதியில் உயர்தரப் பரீட்சைகள் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-8)

## கண்ணீர் அஞ்சலி



### திருமதி பேரம்பலம் மாணிக்கம் (E.S.P)

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

- காரைநகர் வியாவில்
ஐயனார் கோயில் தேவஸ்தானம்

(C-658)


## Study Abroad
வெளிநாட்டில் உயர்கல்வி

**UK (London)**
அடிப்படைத் தகமை A/L or O/L
3 1/2 வருட விசா
20 மணித்தியால பகுதி நேர வேலைவாய்ப்பு
IELTS அவசியம் இல்லை.

**Canada - Student Visa + Work Permit**
கனடிய கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும்
September மாதத்திற்கான பாடநெறிகள் ஆரம்பம்
அடிப்படைத் தகமை O/L மட்டுமே

**Singapore / Malaysia**
Hotel முகாமைத்துவத் துறையில்.
9 மாதங்கள் சிங்கப்பூரில் கற்கைநெறி
பின்னர் - 6 மாதங்கள்
சம்பளத்துடன் கூடிய வேலைவாய்ப்பு.
அடிப்படைத் தகமை O/L or A/L மட்டுமே.

**New Zealand / USA / Poland / Cyprus / Bulgeria**
September மாதத்திற்கான அனுமதிகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.
அடிப்படைத் தகமை O/L or A/L மட்டுமே.

கல்லூரிக் கட்டணம் Visa விற்கு பின்னரே செலுத்தல் வேண்டும்.

நிராகரிக்கப்பட்ட விசா மேன்முறையீடு, மீள் விண்ணப்பித்தல் சேவைகளும் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளால் செய்து தரப்படும்.

ஐரோப்பிய நாடுகளுக்கான விசாக்களும் மற்றும் கல்வி சுற்றுலாக்களும் ஆரம்பிக்கப்பட உள்ளன

**Care Giver to Canada**
முதியோர் பாராமரிப்பாளர்கள் கனடா நாட்டிற்கு அதிகளவில் தேவைப்படுகின்றனர்.

**SCHOLARSHIPS**
சிறந்த தகைமை உள்ளவர்களுக்கு புலமைப் பரிசிலும் வழங்கப்படும்.

வெளிநாடுகளுக்கு சென்ற மாணவர்களின் புகைப்படங்களை நேரில் வந்து பார்வையிடலாம்.

GREENWICH COLLEGE
34, Galle Road, Dehiwala.
Tel : (011) 2713214, 2726237
E: info@greenwich.lk,
w: www.greenwich.lk

Branch:
GREENWICH COLLEGE
01, 2nd Lane,
Power House Road,
(மின்சார நிலைய வீதி),
Jaffna. 0777 630708

மேலதி விபரங்களுக்கு Mob: 0755 091 091 / 0777 751 382


## 1008 சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு வேப்பந்திடல் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய மண்டலாபிசேக பூர்த்தியும் பஞ்சகுண்டபக்ஷ நவோத்தர சகஸ்ர சங்காபிஷேகம் (1008) நாளை திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் மகா முத்துமாரி அம்பாளுக்கு 1008 சங்காபிஷேகமும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கு 108 சங்காபிஷேகமும் மாலை 6 மணிக்கு வசந்த மண்டப பூசையும் நடைபெற்று உள்வீதி, வெளிவீதியுலவரும் காட்சியும் நடைபெறும்.

சங்காபிசேகத்தைத் தொடர்ந்து கும்பாபிசேக மலர் வெளியீட்டு விழாவும் மூத்தோர் கௌரவிப்பும் நடைபெறவுள்ளது.

இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு சங்காபிசேக கிரியைகள் ஆரம்பமாகும் என ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (ந-9)

## கண்ணீர் காணிக்கை

### திருமதி பர்வதாம்பாள் கோவிந்தராஜா



அன்னாரின் பிரிவாற் துயருற்றிருக்கும் அவர் தம் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்

பிரிவால் துயருறும்
தலைவர் மற்றும் கழக
அங்கத்தவர்கள்
நல்லூர் லயன்ஸ் கழகம்

(112)

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி பேரம்பலம் மாணிக்கம் (E.S.P)



நல்லூர் லயன்ஸ் கழக சிரேஷ்ட
உறுப்பினரும் சர்வதேச லயன்ஸ்
கழக 306 B-1 வலயத் தலைவருமாகிய
**லயன் நாகரட்ணம்** PMJF
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி பேரம்பலம் மாணிக்கம் (E.S.P)
(வாரிவளவு காரைநகர்)

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவின் துயரில்
தலைவர் மற்றும் கழக அங்கத்தவர்கள்
நல்லூர் லயன்ஸ் கழகம்

(111)


## சிறுநீரகம் தேவை

O Possitive இரத்த வகை உடைய சிறுநீரகம் தேவைப்படுகிறது. தந்து உதவுவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். (110)

தொடர்புகளுக்கு : 0772064218

## நிர்வாக உத்தியோகத்தர் தேவை

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபைக்கு சபையின் அனைத்து பணிகளிலும் கடமையாற்றக் கூடிய சைவ சமயத்தைச் சேர்ந்த ஆண் ஒருவர் தேவை. அரசாங்க அல்லது தனியார் நிறுவனங்களில் பணியாற்றி இளைப்பாறியவர் விரும்பத்தக்கது. தகுதிக்கேற்ற சம்பளம் வழங்கப்படும். விண்ணப்பத்தை சகல சுய விபரங்களுடனும் தலைவருக்கு அனுப்பி வைக்கவும்.

சைவ பரிபாலன சபை,
66, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.

(106)


## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் ஆறுமுகம்

(இளைப்பாறிய ஆசிரியர்)



காரைநகர் இராசாந்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் பொன்னாவளை, களபூமி, காரைநகரை வசிப்பிடமாகவும் 53/13, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில் வசித்தவருமான சுப்பிரமணியம் ஆறுமுகம் நேற்று (28.07.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (கட்டையர்) சிதம்பரம் தம்பதியினரின் அன்புப் புதல்வரும் காலஞ்சென்றவர்களான தம்பையா (இளைப்பாறிய ஆசிரியர்) சரஸ்வதி தம்பதியினரின் மருமகனும் இந்திராணியின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

53/13, ஆடியபாதம் வீதி,
(மருத்துவபீடம் அருகாமை)
திருநெல்வேலி.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

## கண்ணீர் அஞ்சலி



பொன்மனச் செம்மல்
பேரம்பலம் நாகரத்தினம்
அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி பேரம்பலம் மாணிக்கம் (E.S.P)

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்

மடாதிபதி, தொண்டர்கள்
பெரியாழ்வார் ஆச்சிரமம்,
ஸ்ரீ வில்லிபுத்தூர் ஆழ்வார் சுவாமி கோவில்.

(C-657)


## காணி விற்பனைக்கு

பொஸ்கோ பாடசாலைக்கு 1/2km தொலைவிலும் Temple Road இற்கு அண்மையிலும் உள்ள 2 1/4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

Contact No.:0773627043

தரகர் இல்லை. (109)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொமர்ஷல் வங்கியின் "அருணலு" இளம் சாதனையாளர்களுக்கு 24 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான தொகையை வழங்கியுள்ளது

எமது எதிர்காலத்தின் நம்பிக்கை நட்சத்திரங்கள் சிறுவர்களே. அதனால்தான் சிறந்த பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்காகவே வாழுகின்றனர். அவர்கள் பிள்ளைகளின் கனவுகளையும், அபிலாஷைகளையும் நிறைவேற்ற கடுமையாக உழைத்து சேமிக்கின்றனர்.

இந்தக் கனவுகளையும், அபிலாஷைகளையும் அடைந்து கொள்வதற்கான அடிப்படையே கல்வி. எனவே விருதுகள் மற்றும் அங்கீகாரங்கள் என்பனவற்றின் மூலம் பிள்ளைகளை கல்வியை நோக்கி சாதகமான வழிகளில் தூண்டிவிட வேண்டியது மிகவும் அவசியமானதாகும். இதுவும் சிறந்த பெற்றோர்களுக்கான ஒரு அடையாளச் சின்னமாகும்.

இலங்கையின் மிகப் பெரிய தனியார் வங்கி என்ற வகையில் கொமர்ஷல் வங்கி அன்றாடம் இலட்சக்கானக்கான மக்கள் தமது வாழ்நாள் கனவுகளை நிறைவேற்றிக் கொள்ள உதவி புரிகின்றது. இதன் மூலம் எத்தனையோ பெற்றோர் தமது பிள்ளைகளின் சாதனைகளைக் கண்டு மகிழ்ச்சி அடைந்து வருவதையும் வங்கி நன்றாகப் புரிந்து வைத்துள்ளது.

இதுதான் 'அருணலு' என்ற உன்னதமான சிறுவர் சேமிப்புத் திட்டத்தை வங்கி தொடங்கவும் காரணமாகும். பிள்ளைகள் தமது முறைசார் கல்வித் திட்டத்தின் கீழ் எதிர் நோக்கும் முதலாவது தேசிய பொதுப் பரீட்சையான ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில், ஈட்டுகின்ற சாதனைகளுக்காக வெகுமதிகளை, வழங்குவதே இத் திட்டமாகும்.

கடந்த ஏழு ஆண்டுகளில் மட்டும் வங்கி 2.000 த்துக்கும் மேற்பட்ட சிறுவர்களுக்கு இத் திட்டத்தின் கீழ் சுமார் 24 மில்லியன் ரூபாவை பணப் பரிசாக வழங்கியுள்ளது.

அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு ஒன்றின் மூலம் தெரிவு செய்யப்பட்ட சிலருக்காக வழங்கப்பட்ட பணப் பரிசல்ல. இவை அருணலு சிறுவர் சேமிப்புக் கணக்கை வைத்திருக்கும் சிறுவர்கள் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் தமது பாடசாலை மட்டத்தில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றுக் கொண்டமைக்காகவே பணப்பரிசு வழங்கப்படுகின்றது.

பணப்பரிசில்கள் முறையே ரூபா.10.000 ரூபா.7.500 மற்றும் ரூபா.5.000 வெற்றியாளர்களுக்கு வழங்கப்படுகின்றது. இதற்கு பரீட்சைத் தினத்தன்று அருணலு கணக்கில் ரூபா.5.000 மீதியைக் கொண்டிருக்க வேண்டும்.

இது தவிர இந்த கணக்கை வைத்திருப்பவர் மாவட்ட மட்டத்தில் முதல் இடத்தில் சித்தியடைந்தால் கணக்கு மீதித் தொகையை இரட்டிப்பாக்குவதுடன், ஆகக்கூடியது ரூபா 50.000 வரை கொமர்ஷல் வங்கி இரட்டிப்பாக்கும்.

எவ்வாறாயினும் இந்த அருணலு கணக்கு என்பது வெகுமதிகளுக்கும் அப்பாற்பட்டது. இது சிறுவர்களுக்கு மத்தியில் சேமிப்புப் பழக்கத்தை தூண்டுவதையும் நோக்காகக் கொண்டது. இந்த வகையில் அருணலு கணக்குகளுக்கு வருடாந்தம் 9% வட்டி வழங்கப்படுகின்றது. இது நாட்டில் சிறுவர் கணக்குகளுக்கு வழங்கப்படும் ஆகக் கூடுதலான வட்டியில் ஒன்றாகும்.

"நாட்டில் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை சாதனையாளர்களுக்காக வழங்கப்படுகின்ற மிகப் பெரிய வெகுமதித் திட்டம் அருணலு திட்டமாகும். ஒரு வங்கியானது வாடிக்கையாளர்களின் அன்றாட வாழ்வோடு மிக நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருக்க வேண்டும். அருணலு திட்டத்தின் அங்கீகாரம் மூலம் ஆயிரக்கணக்கான சிறுவர்கள் தமது வாழ்க்கையில் உற்சாகமும், ஊக்கமும் அடைவது எமக்கு மட்டில்லா மகிழ்ச்சி அளிக்கின்றது" என்று கூறினார் வங்கியின் சந்தைப்படுத்தல் பிரதிப் பொது முகாமையாளர் ஹஸ்ரத் முனசிங்க. "எமது சிறுவர் வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் சொந்த கடின உழைப்புக்காக வெகுமதி வழங்கக் கிடைத்தமை உண்மையில் மகிழ்ச்சிக்குரியது. மேலும் அருணலு வெகுமதியாளர்கள் பலர் தொடர்ந்தும் பாடசாலையிலும், வெளிஇடங்களிலும் சாதனை படைத்து வருகின்றமை சிறந்ததோர் விடயமாகும். இவர்களின் வெற்றியைக் கொண்டாடுவதில் கொமர்ஷல் வங்கி பெருமை அடைகின்றது." என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

அருணலு சிறுவர் சேமிப்புக் கணக்கொன்றை கொமர்ஷல் வங்கியின் எந்தவொரு சேவை நிலையங்களில் ஆரம்பிக்கலாம்.













**ஓகஸ்ட் 26ம் திகதி நடைபெறவிருக்கும் 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவ மாணவிகளுக்கு கொமர்ஷல் வங்கியின் நல்வாழ்த்துக்கள்.**

Arunalu Minors' Savings Account

COMMERCIAL BANK







கொமர்ஷல் வங்கியின் நிதியுதவியுடன் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு ஒளிப்பட கருவிகள் வழங்கும் நிகழ்வுநேற்று முன்தினம் நடைபெற்றுது.

இந்நிகழ்வின் போது திருநெல்வேலி கொமஸ்ஷல் வங்கி கிளை முகாமையாளர் எஸ். ராஜமனோகரன் மங்கல விளக்கேற்றுவதையும், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் வசந்திஅரசரட்ணம் உரையாற்ற விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் கெமர்ஷல் வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் எஸ். பி. றஜீவன், வைத்தியா பாலகுமாரிடம் உபகரணப் பொதியை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

படங்கள்:- உ.சாளீன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

ஈ.எஸ்.பி.பேரம்பலம் நிறுவனத்தின் ஆத ரவுடன் யாழ்.பாலர் கல்விக்கழக நிர்வா கத்திலுள்ள 12 ஞானக்குழந்தைகள் இல்ல பாலர் பாடசாலைகளுக்கிடையி லான 46 ஆவது விளையாட்டுவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி க்கு யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் யா/சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியரும் பாலர் கல்விக்கழக தலைவருமான எஸ்.பி. காசிநாதன் தலைமையில் நடைபெறவுள் ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்திப்பிரிவு பணிப்பாளர் செல்வி ஜெயா தம்பையா கலந்து சிறப்பிக்கவு ள்ளார்.

சிறப்பு விருந்தினராக ஈ.எஸ்.பி. நிறு வன உரிமையாளர் லயன் ஈ.எஸ்.பி. நாக ரத்தினம், கௌரவ விருந்தினராக தென் இந்தியத் திருச்சபையின் முன்னாள் பேரா யர் வணக்கத்துக்குரிய கலாநிதி எஸ். ஜெப நேசன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவு ள்ளனர். (அ-3)

## கலந்துரையாடலுக்கான அழைப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் சமூகத்தின் தற்போதைய நிலை யைக் கருத்திற்கொண்டு எமது இனத்தை கைதூக்கி விடுவதற்கு சில முயற்சிகள் செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தின் காரணமாக மக்களுடைய நாளாந்த பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு உதவியளிக்கும் என்ற நோக் கத்திலாலான கலந்துரையாடல் இன்று ஞாயி ற்றுக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் 11.30 மணி வரை யாழ்ப்பாணம், அரசடி வீதி, இல.60 இல் அமைந்துள்ள சொண்ட் மண் டபத்தில் நடைபெறவுள்ளதாக ச.செந்துராசா அறிவித்துள்ளார்.

அரசியல் சமூக கலாசார சமய பேதங்களு க்கு அப்பால் மனிதாபிமான ரீதியில் ஒவ் வொரு பிரச்சினையும் அணுகப்பட வேண் டிய தேவையுள்ள காலகட்டம் என்பதால் எமது பங்கிற்கு ஒரு சிறு துரும்பையாவது அசைத் தால் அது மிகப்பெரிய பயனுள்ளதாக இருக் கும் என்பது அபிப்பிராயம் ஆகும்.

எனவே, இக்கலந்துரையாடலுக்குத் தாங் கள் சமுகமளித்து தங்கள் பயனுள்ள கருத் துகளை முன்வைக்குமாறு எமது சமூகத்தின் நலன்நோம்பு நடவடிக்கையில் பங்கு கொள் ளுமாறும் அபிவிருத்திக்கான சமூக அமைப் புக்களின் வலையமைப்பு அழைப்பு விடுத் துள்ளது. (அ-9)

## தாகசாந்தி நிலையங்களில் பரிசோதனை நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவத்தினை முன்னிட்டு இயங்கி வரும் தாகசாந்தி நிலையங்களின் சுகாதார நிலைமைகளை யாழ்.மாநகர சுகாதாரப் பகுதியினர் கண்காணித்தும் பரிசோதனை நடத்தியும் வருகின்றனர்.

தாகசாந்தி வழங்கும் நிலையங்களின் சுகாதார செயற்பாடுகளை நேற்றைய தினம் சுகாதார பரிசோதகர்கள் அவதானித்து வந்த மையை அவதானிக்கக்கூடியதாக இருந்த தாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

## வாரம் ஒரு தகவல்

### தூங்க முடியவில்லை

“டாக்டர்...! நீங்கள்தான் என்னைக் காப்பாற்ற வேண் டும்...!”

“என்ன பிரச்சினை உங்களுக்கு?”

“நிம்மதியாகத் தூங்க முடியவில்லை...!”

“ஒரு மனிதன் தன் வாழ்நாளிலே மூன்றில் ஒரு பகுதியை தூக்கத்திலேதான் செலவு செய்கிறான்... தெரியும் தானே...!”

“அவர்கள் எல்லாம் கொடுத்து வைத்தவர்கள்...!”

“அது இருக்கட்டும்... ஒருவர் எப்படி தூங்குகின்றார் என் பதை வைத்தே அவருடைய மனதைப் புரிந்து கொள்ள லாம்...!”

“அது எப்படி?”

“ஒரு காலை நிமிர்த்தியும் மற்றைய காலை மடக்கியும் வைத்துக் கொண்டு உறங்குபவர்களுக்கு இரண்டு விதமான குணங்கள் உள்ளன! இவர்களெல்லாம் சில நேரங்களிலே தங்களைப் பலசாலிகளாகக் காட்டிக் கொள்வார்கள்... ஆனால், அதுவே அவர்களுடைய குணமில்லை... மன துக்குள்ளே பதுங்குவார்கள்!”

“அப்படியா?”

“ஆமாம்! மனதுக்குள்ளே ஒரு தவிப்பு அல்லது பயம் உள்ளவர்கள் பந்து மாதிரி சுருண்டு போர்வைக்குள்ளேயே பதுங்கி உறங்குவார்கள்...! அந்த பயம் சென்ற பின்னர் அமைதியாக நிமிர்ந்து தூங்குவார்கள்...”

“டாக்டர்... நீங்கள் சொல்வதெல்லாம் தூங்குகிறவர்களைப் பற்றியது...! என்னை மாதிரி தூங்க முடியாதவர்களுக்கு ஏதா வது வழி உண்டா... அதைச் சொல்லுங்கள்...!”

“உங்களாலே ஏன் தூங்க முடியவில்லை...?”

“மனைவி ‘தொண தொண’வென்று பேசிக் கொண்டே இருக்கின்றார் சேர்! அப்புறம் எப்படி நான் தூங்க முடியும்?”

“எங்கள் வீட்டிலேயும் அதே பிரச்சினைதான்... அதற்கு வழி இதுதான்... இந்தாங்கள்!”

“என்ன இது?”

“தூக்க மாத்திரை!”

“மிகவும் நன்றி டாக்டர்... இதை நான் எப்படிச் சாப்பிட வேண்டும்?”

“இது உங்களுக்கு இல்லை... உங்களுடைய மனைவிக்கு!”

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## வணிக நாதம் வெளியீட்டு விழா

(சுன்னாகம்)

சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி கலை, வர்த்தக மாணவமன்றத்தினால் 12 ஆவது வணிகநாதம் சிறப்புமலர் வெளி யீட்டு விழா நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்கு புதிய கேட் போர்கூட மண்டபத்தில் நிதர்சன் தலை மையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக வணிகபீட முகா மைக்கற்கைகள் பேராசிரியர் க.தேவராஜா, சிறப்பு விருந்தினராக கொமர்ஷல் வங்கி திருநெல்வேலிக் கிளையின் உதவி முகா மையாளர் வி.நிகுஷன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-9)

## இராசி பலன்

29.07.2012

(ஆடி 14, ஞாயிற்றுக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
ஏகாதசி மாலை 5.02 மணிவரை
கேட்டை பின்னிரவு 2.33 மணிவரை
இராகுகாலம் 4.33-6.03 மணிவரை
சுபநேரம் 9.03-10.33 மணிவரை
ஏகாதசி விரதம்.

**மேடம்** கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள், மற்றவர்களுக்காக பொறுப்புச் சொல்வதைத் தவிர்ப்பது நல்லது, விரயங்கள் கூடும், உடல் நலனில் கவனம் தேவை.

**இடபம்** பெண்களால் பெருமை சேரும் நாள், வெளி யூர்த் தொடர்புகள் நன்மை தரும், நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள், பிரிந்தவர்கள் இணையும் வாய்ப்புண்டு.

**மிதுனம்** வீட்டுப் பிரச்சினைகள் தீரும், பழைய கடனில் ஒரு பகுதியை கொடுத்து மகிழும் வாய்ப்புண்டு, வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், போசன சுகமுண்டு.

**கடகம்** தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், பிரபல மானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர் கள், பிள்ளைகளின் தேவைகளை நிறைவு செய்வீர்கள், தொழில் மேன்மையுண்டு.

**சிங்கம்** மறக்கமுடியாத சில சம்பவங்கள் இடம் பெறலாம்,கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர்களால் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், வாகன சுகமுண்டு.

**கன்னி** இனிய அனுபவங்கள் ஏற்படலாம், வாக்கு மேன்மையுண்டு, உயர்வான சிந்தனைகள் மனதில் குடிகொள்ளும், முருகன் வழிபாடு முன்னேற்றம் தரும், உறவினர் உதவியுண்டு.

**துலாம்** புத்திசாலித்தனமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், பொருளாதார நிலை உயரும் தொலைபேசி வழித்தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும்.

**விருச்சிகம்** சயன சுகமுண்டு, வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், கற்பனை மிகுதியான நாள், உறவினர் பகை அகலும், எண்ணங்கள் எளிதில் கைகூடும்.

**தனுசு** எதிலும் கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், அனுபவம் மிக்கவர் களின் ஆலோசனையை கேட்பீர்கள்.

**மகரம்** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடு வீர்கள், உறவினர் வருகையுண்டு, புதிய தகவல்கள் வந்து சேரும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்,தெய்வீக சிந்தனை மேலோங்கும்.

**கும்பம்** தடைப்பட்ட காரியங்கள் கைகூடும், தூரதேசச் செய்திகளால் நன்மையுண்டு, மனதில் உற்சாகம் பிறக்கும், போசன சுக முண்டு, எதிர்பார்த்த தொகைகள் வந்து சேரும்.

**மீனம்** மனக்குழப்பம் தீர்ந்து மகிழ்ச்சி கூடும் நாள், மறதியால் விட்டுப்போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், தேகநலன் சீராகும், சொத்து தகராறுகள் சுமுகமாக முடியும்.

வளவன்

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 70 | 70 | 50 |
| உருளைக்கிழங்கு | 80 | 80-140 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 70-100 | 60 | 60 | 60 |
| தக்காளி | 140 | 100 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 40 | 50 | 40 |
| கோவா | 55 | 60 | 50 | 80 |
| கரட் | 100 | 120 | 100 | 140 |
| பூசணி | 60 | 50 | 50 | 60 |
| புடோல் | 50 | 40 | 40 | 50 |
| வாழைக்காய் | 60 | 50 | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 50-100 | 60 | 80 | 60 |
| பெரிய வெங்காயம் | 85 | 50 | 90 | 80 |
| பாகற்காய் | 120 | 80 | 70 | 70 |
| வெண்டிக்காய் | 70-90 | 60 | 60 | 70 |
| கருணைக் கிழங்கு | -- | 120 | -- | -- |
| பயற்றங்காய் | 90-100 | 60 | 100 | 60 |
| லீக்ஸ் | 110 | 120 | 110 | 140 |
| பீற்றூட் | 50 | 60 | 60 | 60 |
| கறிமிளகாய் | 80 | 80 | 90 | 140 |
| முருங்கைக்காய் | 70-80 | 130 | 100 | 120 |
| போஞ்சி | 100 | 110 | 100 | 140 |
| கத்தரிதம்பள்ள | -- | 60 | 50 | -- |
| கீரை - 1 பிடி | 8-10 | 10 | 20 | 20 |
| தேசிக்காய் | 80-90 | 70 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 15-25 | 20 | 25 | 18-20 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களின் கல்வியை சீர்குலைக்கும் அமைச்சர்கள் பதவிவிலக வேண்டும்

## நீதிபதியை அச்சுறுத்துமளவிற்கு அமைச்சர்கள் சண்டியனாகிவிட்டனர் என்கிறார் ஜயலத்

(கொழும்பு)

மன்னார் நீதிபதியை அச்சுறுத்திய அமைச்சரை உடனடியாகத் கைது செய்து சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோன்று மாணவர்களின் கல்வியை சீரழிக்கும் அமைச்சர்களான எஸ்.பி.திசாநாயக்க மற்றும் பந்துல குணவர்த்தனவை அமைச்சுப் பொறுப்புக்களிலிருந்து நீக்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டின் போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

வரலாற்று சிறப்புமிக்க 110 இடங்களில் இவ் வருடத்தில் புதையல் தோண்டப்பட்டுள்ளது. அதேபோன்று சிறுவர் துஷ்பிரயோகம், கொலை, கொள்ளை என்று நாட்டில் சட்ட ஒழுங்குகள் சீரழிக்கப்பட்டுள்ளன. பொது மக்களின் நம்பிக்கை நிதியங்களை சூறையாடி ஒட்டுமொத்த மக்களையும் அரசாங்கம் படுபாதாளத்தில் தள்ளி விட்டுள்ளது என்றும் அக்கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

இங்கு உரையாற்றிய ஐ.தே.கவின் பாராளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன கூறுகையில், ஒரு திரில்லியன் ரூபாவாக உள்ள ஊழியர் நம்பிக்கை நிதியங்கள் அரசாங்கத்தின் குடும்ப சொத்தாக மாறியுள்ளது.

எவ்விதமான அனுமதியோ வழிமுறைகளையோ கையாளாது பங்குச் சந்தையில் ஊழியர் நம்பிக்கை நிதியத்தை முதலீடு செய்து பாரிய ஆபத்தை அரசு எதிர்கொண்டுள்ளது. மேலும் மேலும் மக்களை உறிஞ்சி தனது ஜீவனோபாயத்தை பெற்றுக் கொள்ளும் கொள்கையிலேயே அரசு உள்ளது.

நாட்டில் கல்வித்துறை சீரழிந்துள்ளது. இசட் புள்ளி சர்ச்சையினால் சுமார் மூன்று இலட்சம் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். அதேபோன்று இதற்குக் காரணமாக இருந்த அமைச்சர்களான பந்துல குணவர்த்தன மற்றும் எஸ்.பி.திசாநாயக்க ஆகியோர் தண்டிக்கப்பட வேண்டும். நீதிபதிகளை அச்சுறுத்தி தீர்ப்புக்களை மாற்றுமளவிற்கு அமைச்சர்கள் சண்டியன்களாகியுள்ளனர். இதனை அனுமதிக்க முடியாது.

எனவே, மன்னார் சம்பவத்துடன் தொடர்புடைய அமைச்சர் கைது செய்யப்பட வேண்டும் என்றார். (அ-2)

## இலவச மருத்துவ முகாம்

(சாவகச்சேரி)

கைதடி லயன்ஸ் கழகத்தினால் இலவச மருத்துவ முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் லயன் டாக்டர் திருமதி கலைச்செல்வி சவுந்தரராஜன், லயன் டாக்டர் எஸ்.எஸ். அருளானந்தம் மற்றும் கொழும்பு அப்பலோ வைத்திய நிபுணர்களும் யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்கள் ஆகியோர் சிகிச்சை அளிக்கவுள்ளனர். இவ் இலவச மருத்துவ முகாமில் பொது மருத்துவம், குழந்தைகளுக்கான வைத்தியம், கண் சிகிச்சை, உடல் பருமன் உள்ளவர்களுக்கானவைத்திய ஆலோசனை என்பன வழங்கப்படவுள்ளன. (அ-3-29)



உசன் மிருசுவிலைச் சேர்ந்த கந்தையா யோகநாதன் (வயது 59) என்பவர் நேற்று முன்தினம் எழுதுமட்டுவாழ் சந்திக்கும் ஆசைப்பிள்ளை ஏற்றத்திற்கும் இடையில் ஏ-9 வீதியோரத்தில் சடலமாக கிடப்பதை படத்தில் காணலாம்.

(படம்:- மிருசுவில் செய்தியாளர்)

## அவசர கலந்துரையாடல்

இலங்கை சுதந்திரப்பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்படவிருக்கும் அடையாளப் பணி புறக்கணிப்புத் தொடர்பாக அவர்களால் விடுக்கப்பட்ட அவசர அழைப்பிற்கு வட மாகாணத்தில் உள்ள அரசாங்க சேவையிலுள்ள பட்டதாரிகள் சார்பாக தீர்மானமொன்றினை மேற்கொள்ளுவதன் பொருட்டு கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளதாக செயலாளர் கே.எஸ்.மயூரன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய இக் கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு கொக்குவிலில் அமைந்துள்ள வடமாகாண அரச சேவைப்பட்டதாரி அலுவலர்கள் சங்க அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (அ-9)


af ALLIANCE FRANÇAISE DE JAFFNA
The Only Official French Language Center in Jaffna
*Learn French the French Way*

French Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச தரம் வாய்ந்த யாழ்ப்பாணத்திலுள்ள ஒரே ஒரு பிரெஞ்சு மொழிக் கல்வி நிறுவனமாகிய Alliance Francaise de Jaffna ஊடாக பிரெஞ்சு மொழி வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன. France மற்றும் பிரெஞ்சு பேசப்படும் நாடுகளுக்கு செல்வோர் மற்றும் மொழி ஆர்வ முள்ள எவரும் கற்றுக்கொள்ளலாம்.

வகுப்புக்கள்:- சனி,ஞாயிறுகளில்
புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.
61,Kachcheri-Nallur Road ,Jaffna T.P: 021 2228093
E.mail:alliancejaffna@yahoo.com
(றக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடி கட்டடம்)
மேலதிக விபரங்களை நேரில்/தொலைபேசியினூடாக பெறலாம்
(105)


## சர்வாதிகார போக்குடைய இவ்வரசை தோற்கடிக்க வேண்டியது அவசியம்

### ஐ.தே.க.பிரதித்தலைவர் சஜித் தெரிவிப்பு



(கொழும்பு)

பொதுவான எதிரியாக இந்த சர்வாதிகார அரசாங்கத்தை கருத வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான கருஜயசூரிய, தயாசிறி ஜயசேகர ஆகியோரை பிரதான எதிரியாக கருதி சிலர் செயற்பட்டு வருவதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தல்களில் தயாசிறி, கரு ஆகியோர் மிக முக்கியமான பங்களிப்பை வழங்குவார்கள் என அவர் தெரிவித்துள்ளார். கட்சியின் எந்தவொரு உறுப்பினரையும் நாம் ஓரங்கட்டக்கூடாது. ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் போது அது ஆளும் கட்சியையே வலுவடையச் செய்யும். சர்வாதிகார போக்குடைய இந்த அரசாங்கத்தை தோற்கடிக்க வேண்டியது மிகவும் அவசியமானது.

யாரையும் உயர்த்த வேண்டுமென்ற நோக்கம் கிடையாது எனவும் கட்சியை வலுப்படுத்துவதன் மூலமே வெற்றிகளை ஈட்ட முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)


## மணமகள் தேவை — கல்யாண மாலை — மணமகன் தேவை

பிறப்பு:- 1978 இந்து வேளாளர்
நட்சத்திரம்:- சதயம் 4
உயரம்:-5'8"
கி.பா:-57
தொழில்:- AEROSPACE ENGINEER (U.K-P.R)
B/128

பிறப்பு:- 1979 இந்து வேளாளர்
நட்சத்திரம்:-மிருகசீரிடம் 02
உயரம்:-5'8"
கி.பா:-13
தொழில்:- Bsc Qvantity surveying (புரூணை)
B/179

பிறப்பு:- 1974 இந்து வேளாளர்
நட்சத்திரம்:-பரணி 3
உயரம்:- 5'2"
கி.பா:-36.25
தொழில்: பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியை
G/172

பிறப்பு:- 1988 இந்து வேளாளர்
நட்சத்திரம்: மூலம் 3
உயரம்:-5'3"
கி.பா:-54, 7 இல் செவ்
தொழில்:-பொறியியற்றுறை இறுதி வருடம்
G/180

பிறப்பு:- 1982 இந்து வேளாளர்
நட்சத்திரம்:- ரோகினி 1
உயரம்:- 5'8"
கி.பா:-16, 8 இல் செவ்
தொழில்:-கணக்காளர் BBA,B.A (U.K)PSW Visa
B/167

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல.144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E.mail:-kalyanamalai.jaffna@gmail.com

பிறப்பு:- 1987 இந்து வேளாளர்
நட்சத்திரம்:- அனுசம் 2
உயரம்: 5'3"
கி.பா:-28, 8 இல் செவ்
தொழில்: - பொறியியல் (4 ஆவது வருடம்)
G/106

பிறப்பு:- 1979 இந்து வேளாளர்
நட்சத்திரம்:-அனுஷம் 3
உயரம்:- 5'10"
கி.பா:-23.5
தொழில்:-சாரதி(சவுதி)
B/170

பிறப்பு:- 1990 இந்து வேளாளர்
நட்சத்திரம்:- பூரட்டாதி 2
உயரம்: 5'2"
கி.பா:-52 , 4 இல் செவ்
தொழில்:- I.C.T
G/196

ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு மாகாண சபைத் தேர்தல் தொடர்பில்

# த.தே.கூ.விற்கு தமிழ் சமூகம் விடுக்கும் வேண்டுகோள்

**தமிழர்கள் ஒற்றையாட்சி அரசியலமைப்பையும் அதன் கீழான மாகாண சபை முறைமையையும் தமது அரசியல் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் தன்மையற்றது என தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வந்துள்ளனர். எமது தாயகத்தில் கடந்த காலத்தில் இரண்டு முறை (1989, 2008) நடந்த மாகாண சபைத் தேர்தல்களை தமிழ்த்தேசிய நிலைப்பாடில் உள்ள கட்சிகள் புறக்கணித்திருந்தன. அரச சார்புத் தமிழ்க் கட்சியொன்றினால் சுயாதீனமாக நடத்த முடியாத மாகாண சபையை தமிழ்த்தேசிய நிலைப்பாட்டிலுள்ள கட்சியொன்று சுயாதீனமாக நடத்த முடியாது என்பதில் சந்தேகமிருக்க முடியாது என 97 சிவில் சமூக உறுப்பினர்கள் கையெழுத்திட்டு த.தே. கூட்டமைப்பினருக்கு வேண்டுகோள் விடுத்து வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

ஆளுநரதும் மத்திய அரசாங்கத்தினதும் பிடியில் உள்ள மாகாண சபை முறைமையைக் கொண்டு ஒன்றும் செய்ய முடியாது என்பதை 1989 மற்றும் 2008 இல் இடம்பெற்ற மாகாண சபைத் தேர்தல்களில் போட்டியிட்டு தம்வசம் வைத்திருந்த அப்போதைய முதலமைச்சர்கள் தெளிவாக அவ்வப்போது கூறியுள்ளனர்.

தேர்தல்களில் பங்குபற்றுவது என்பது ஓர் அரசியல் இலக்கை எய்துவதற்கான கருவியாக இருக்குமிடத்து அவற்றில் பங்குபற்றுவது சரியாக இருக்கும். மாறாக அவ்வாறாகப் பங்கெடுப்பதானது எடுத்துக்கொண்ட அரசியல் இலக்குகளுக்குப் பாதகமாக இருக்குமிடத்து மாற்றுபாயங்களைப் பற்றிச் சிந்திப்பதும் எம்மீது திணிக்கப்படும் ஓர் தேர்தலை எவ்வாறு கையாள வேண்டும் என்பது தொடர்பில் முன்யோசனையுடனும் தூர நோக்குடனும் செயற்படுவதும் இற்றைக்காலத்தில் தமிழ்த்தேசிய அரசியலின் முன்னகர்வுக்குப் அத்தியாவசியமானது.

தமக்கெதிராக இழைக்கப்படும் அட்டூழியங்களிற்கெதிராக தமது எதிர்ப்பைக் காட்டுவதற்கு மக்கள் தேர்தல்களைப் பயன்படுத்த வேண்டும் என்று அங்கலாய்க்கின்றமை விளங்கிக் கொள்ளக்கூடியதே. அத்தகைய எதிர்ப்பை- கோபத்தை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தை பயன்படுத்துதல் என்பது ஒருபக்கமிருக்க தேர்தலில் பங்குபற்றுவதனால் ஏற்படக்கூடிய அரசியல் பாதகங்களையும் கவனிக்காமல் விட முடியாது.

இவ்விரண்டையும் சமாளித்துப் போகக்கூடிய வகையில் - தேர்தலில் பங்குபற்றுவதற்கான மாற்றுபாயங்களை பற்றி நிதானமாகச் சிந்தித்து ஓர் விடயத்தின் பல் பரிமாணங்களை விளங்கிக் கொண்டு முடிவெடுப்பதும் தமிழ்த்தேசியக் அரசியலில் ஆத்மார்த்தமான அக்கறையுள்ள அனைவரினதும் தலையாய கடப்பாடாகும். வெறுமனே அரச சார்புத் தமிழக் கட்சியொன்றை கிழக்கு மாகாண் வெளிக்குள் விடக்கூடாது என்ற உடனடி அரசியல் தந்திரோபாயத்திற்காக தமிழ் மக்களின் விட்டுக்கொடுக்கப்படவோ விலை பேசவோ முடியாத அடிப்படையான அரசியல் நிலைப்பாடுகளில் தொய்வு ஏற்படுவதை தமிழ் மக்கள் அனுமதிக்க ஒருபோதும் முன் வரமாட்டார்கள்.

எது எவ்வாறாக இருப்பினும் தேர்தல்களில் நேரடியாகப் பங்குபற்றுவது என்ற முடிபை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்துள்ளது என்ற கடினமான யதார்த்தத்தை கருத்தில் கொண்டு த.தே. கூ. தனது தேர்தல்விஞ்ஞாபனத்தில் முதன்மைப் படுத்த வேண்டிய விடயங்கள் தொடர்பில் சில பரிந்துரைகளைச் செய்ய விழைகின்றோம்.

1. தற்போதைய ஒற்றையாட்சி அரசியலமைப்பும் அதன் கீழான மாகாண சபை முறைமையும் நிராகரிக்கப்பட வேண்டும். 13 ஆவது திருத்தமானது அரசியல் தீர்வுக்கான ஆரம்ப புள்ளியாக கூட ஏற்கப்பட முடியாதது.

2. வடக்குக் கிழக்கு தமிழ் பேசும் மக்களின் தாயகமாகும் எந்தவொரு அரசியல் தீர்வும் இணைந்த வடக்குக் கிழக்கை ஓர் அலகாக அங்கீகரிப்பதாக அமைய வேண்டும். இவ்விடயம் தொடர்பில் குறிப்பாக முஸ்லிம் மக்களது நம்பிக்கையை பெற்றுக்கொள்வது முக்கியமானதாகும். தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் இணைந்து வேலை செய்தல் இவ்விரு சமூகத்தினதும் இருப்பைத் தக்க வைத்துக் கொள்வதற்கு இன்றியமையாததாகும்.

நீடித்து நிற்கக்கூடிய அரசியல் தீர்வொன்று தமிழர்களது தேசம், சுய நிர்ணய உரிமை ஆகியவற்றை அங்கீகரிப்பதனூடாகவே வரும். இவற்றை அங்கீகரிக்காத எந்தவொரு அரசியல் செயன்முறையும் பிரயோசனமற்றது.

ஜெனீவா தீர்மானம் நிறைவேற்றப்பட்டு நான்கு மாதங்கள் கடந்துள்ள நிலையில் தமிழருக்கெதிரான அநியாயங்களும் அடக்குமுறைகளும் பெருகியுள்ளனவே அன்றி குறையவில்லை. தமிழரது நிலங்கள் தொடர்ந்து ஆக்கிரமிக்கப்படுதல், தமிழ் அரசியல் கைதிகள் தொடர்ச்சியாக தடுப்பில் வைக்கப்பட்டிருத்தல், காணாமல்போனோர் தொடர்பில் தொடர்ச்சியாக எவ்வித முன்னேற்றமும் இல்லாதிருத்தல், தமிழ்த்தேசியத்தின் பொருளாதார , கலாசார அடிப்படைகள் சீரழிக்கப்படுதல், அன்றாட வாழ்க்கையில் இராணுவத்தினரின் தலையீடுகள் அதிகரித்தல், கல்வி, உயர்கல்வி, சுகாதாரம், விவசாயம், மீன்பிடி ஆகிய அனைத்துத் துறைகளினது தனித்துவங்களை சீரழிக்கும் வகையில் அரசியல்வாதிகளின் தலையீடு அதிகரித்தல், உயர்பாதுகாப்பு வலயங்கள் நிரந்தரமாக்கப்படல் ( சம்பூர் உயர் பாதுகாப்பு வலயம் உட்பட) இடம்பெயர்ந்த மக்களில் குறிப்பிடத்தக்க தொகையினர் தொடர்ச்சியாக முகாம் வாழ்வில் இன்றும் அல்லற்படல், மீள்குடியேற்றப்பட்ட மக்களின் வாழ்வாதாரங்கள் புறக்கணிக்கப்படல் போன்றன தமிழ் மக்கள் தொடர்ச்சியாக அனுபவிக்கும் இன்னல்களுக்கு உதாரணங்கள். மேலும் தமிழருக்கு எதிராக இழைக்கப்பட்ட இனப்படுகொலை மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பில் பொறுப்புக்கூறும் நடவடிக்கைகளிலும் எவ்வித முன்னேற்றமும் இல்லை.

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் அடிப்படையில் தமிழரது பிரச்சினைகளிற்கு தீர்வு காண முடியாது என்பதைச் சர்வதேச சமூகம் உணர வேண்டும். அவ்வறிக்கையும் அதனை அமுல்படுத்துவதற்கான திட்டமும் சர்வதேசத்தை ஏமாற்றும் நேரத்தை வாங்கும் முயற்சியே. மேலும் அவ்வாறாகக் கிடைக்கும் நேர இடைவெளிக்குள் தமிழர்களது இருப்பை முற்றாக இல்லாதொழிப்பதற்கு அரசாங்கம் திட்டமிடுகின்றது என்பதை சர்வதேச சமூகம் புரிந்து கொள்ள வேண்டும்.

மேற்படி விடயங்களை வலியுறுத்தி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இத்தேர்தல்களில் பங்குபற்றுவதனூடாக தமிழர்கள் பிரிந்த வடக்குக் கிழக்கை அங்கீகரித்து விட்டனர். மாகாண் சபை முறைமையை ஏற்றுக்கொண்டு விட்டனர் என்ற வாதத்தின் செறிவை ஓரளவேனும் குறைக்கலாம் என எண்ணுகிறோம். மாகாண சபை முறைமையையும் பிரிந்த வடக்குக் கிழக்கையும் நாம் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை சர்வதேச சமூகத்திற்கு உணர்த்தல் இன்றியமையாததாகும் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்படுகின்றது. (அ)

## வலம்புரியின் ஆசிரியர் தலையங்கத்திற்கு சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பதில்



வலம்புரி நாளிதழில் பிரதேசவாத அபிவிருத்தி வேண்டவே வேண்டாம் என்ற தலைப்பில் நேற்று முன்தினம் வெளியான வெளியான ஆசிரியர்தலையங்கத்திற்கான பதிலை யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

அதன் விபரங்கள் வருமாறு,

யாழ். மாவட்டத்தில் கடந்த காலங்களில் சில பிரதேசங்களில் நிலவிய சூழ்நிலை காரணமாக அக்காலப் பகுதியில் அப்பிரதேசங்களில் உள்ள வைத்தியசாலைகளினை அபிவிருத்தி செய்ய முடியவில்லை. தற்போது இந்நிலை மாறியிருப்பதால் அப்பிரதேசங்களிலும் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

மண்டைதீவு வைத்தியசாலையினை நிர்மாணிப்பதற்கு கேள்விப் பத்திரங்கள் ஏற்கனவே பத்திரிகைகளில் போடப்பட்டு தற்போது ஒப்பந்தகாரரை தெரிவு செய்யும் கேள்விப் பத்திர மீளாய்வு நடைபெற்று வருகின்றது. வெகுவிரைவில், இவ்வைத்தியசாலைக்கான நிர்மாணப் பணிகள் ஆரம்பமாகும். இவ்வைத்தியசாலை அமைப்பதற்குரிய இடத்தில் அமைந்துள்ள பழைய வைத்தியசாலையின் இடிபாடுகளை அகற்றும் பணிகள் கடந்த 4 நாட்களாக நடைபெற்று வருகின்றன.

தீவகப் பிரதேசத்திலே ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, 2010 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டது. தற்போது வேலணை, சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் கட்டட நிர்மாணப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இது இவ்வருட இறுதிக்குள் பூர்த்தி செய்யப்படும். மேலும் புங்குடுதீவு வைத்தியசாலையில் குடும்ப நல உத்தியோகத்தர்களுக்கான தங்குமிட விடுதி அமைக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

GFATM திட்டத்தின் கீழ் வேலணை, காரைநகர், நெடுந்தீவு ஆகிய வைத்தியசாலைகளுக்கு வெளிநோயாளர் பிரிவுக்கட்டடம் அமைப்பதற்குரிய திட்டம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் இவ்வருட இறுதிக்குள் ஆரம்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆதார வைத்தியசாலை, ஊர்காவற்றுறையில் சீன உதவித்திட்டத்தின் கீழ் வைத்திய உத்தியோகத்தர்களுக்கான தங்குமிட விடுதி அமைப்பதற்கான திட்டம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதன் நிர்மாணப் பணிகள் அடுத்த வருடம் ஆரம்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது என்றுள்ளது. (அ)

## மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதால் நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை பின்வரும் பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய பண்டத்தரிப்பு, சில்லாலை, நிச்சாமம், விளான், இளவாலை, மாதகல், சாந்தை, வடலியடைப்பு, இடும்பன் பிரதேசம், தொல்புரம், சுழிபுரம், நாவற்குழி, தச்சன்தோப்பு, மறவன்புலோ, கோகிலாக்கண்டி ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-9)

## பரிந்துரை அமுலாக்கல் ஆவணம் ஐ.நா.வில் சமர்ப்பிக்கப்படும்

### அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழு இறுதி அறிக்கைப் பரிந்துரை அமுலாக்கம் தொடர்பிலான ஆவணம் விரைவில் ஐக்கிய நாடுகள் அமைப்பிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சு கேட்போர் கூடத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஓரிரு தினங்களில் உண்மையைக்கண்டறியும் ஆணைக்குழு அறிக்கைப் பரிந்துரை அமுலாக்கம் தொடர்பான ஆவணம் ஐக்கிய நாடுகள் அமைப்பில் சமர்ப்பிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

நிலக்கண்ணி வெடி அகற்றுதல், முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வளித்தல் மற்றும் இடம்பெயர் மக்களை மீள்குடியேற்றல் ஆகிய நடவடிக்கைகள் அநேகமாக பூர்த்தியாகியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

பாரியளவிலான உயர் பாதுகாப்பு வலயங்கள் பொது மக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். (அ-2)


# கண்ணீர்க் காணிக்கை



(அ-642)

திருமதி பேரம்பலம் மாணிக்கம்

(ESP)

தாய்மைக்கு உதாரணமான எம் ஊரின்
உறவே அறப்பணியில் நிறைவு கண்டீர்
உம் வாழ்வில்
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்கள்.

திரு திருமதி கண்ணன் குடும்பத்தினர்
ஸ்ரீ கண்ணன் ஸ்ரோர்,
திருநெல்வேலி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமேஸ்வரம் மீனவர்கள் 23 பேர் விடுதலையாகினர்

## புதுடில்லிக்கு பணிந்தது கொழும்பு

(அநுராதபுரம்)

இலங்கை சிறையில் அடைக்கப்பட்டிருந்த தமிழகத்தைச் சேர்ந்த 23 மீனவர்கள் இந்திய வெளி விவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவின் வலியுறுத்தலையடுத்து நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 21 ஆம் திகதி கடலில் மீன்பிடிக்க 5 படகுகளில் இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 23 மீனவர்களை இலங்கை கடல் எல்லைக்குள் வந்து மீன்பிடித்ததாகக் கூறி இலங்கை கடற்படையினர் அவர்களை கைது செய்தனர்.

மன்னார் நீதிமன்றத்தின் முன் ஆஜர்படுத்தப்பட்ட அவர்களை 15 நாட்கள் சிறையில் அடைக்க உத்தரவிடப்பட்டு அவர்கள் அநுராதபுரம் சிறையில் அடைக்கப்பட்டனர்.

இந்நிலையில் தமிழக மீனவர்களை உடனடியாக விடுவிக்கக் கோரி இந்தியா சார்பில் வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா கடந்த வியாழக்கிழமை வலியுறுத்தியதன் விளைவாக மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் தமிழகம் வந்தடைந்ததாக தமிழக அரசு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-2)

# கணனிப்பயிற்சிகளுக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை வடமாகாணத்திற்கான முதல்தர கணனி மையத்தினை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் அமைத்துள்ளது.

இதில் தகவல் தொழில்நுட்பத்தில் தேசிய டிப்ளோமா சான்றிதழ் (ஒரு வருடம்-NDICT) தகவல் தொழில் நுட்பத்தில் தேசிய சான்றிதழ் (6 மாதம்- NCICT), கணனி வன்பொருள் தொழில்நுட்பம் (6 மாதம்- NVQ III) ஆகிய கற்கை நெறிகள் ஆரம்பமாகவுள்ளன.

தொடர்ச்சியாக தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம் செல்லவுள்ள மேற்படி கற்கை நெறிக்கு ஆர்வமுள்ள பயிலுநர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண தொழிற்பயிற்சி அதிகார சபையின் மாவட்ட இணைப்பாளர் இரா.அகிலன் அறிவித்துள்ளார்.

சுயவிபர கோவைகளை பயிலுநர்கள் நேரடியாக அல்லது தபால் மூலம் இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை, இல.375, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு நாளை திங்கட்கிழமைக்கு முன் அனுப்பிவைக்க வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு 021 222 7949, 077 244 4040 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும்.

(அ-9)

# கோரினார் அமைச்சர் எஸ்.பி. மறுத்தனர் விரிவுரையாளர்கள்

(கொழும்பு)

தொழிற்சங்க போராட்டத்தை கைவிட்டு பணிக்கு திரும்புமாறு பல்கலைக்கழக பேராசிரியர்களிடம் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

பல்கலைக்கழகங்களுக்கு புதிய மாணவர்களை சேர்க்கும் நடவடிக்கைகள் ஆரம்பமாகவுள்ளது. இந்த நிலையில் குறுகிய அரசியல் நோக்கங்களை முன்னிலைப்படுத்தி தொழிற்சங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடாது.

இந்த தொழிற்சங்க போராட்டத்தினால் பல்கலைக்கழக மாணவ, மாணவியர் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

மேலும் புதிய மாணவர்களை சேர்ப்பதிலும் சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளது என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

எனினும் இந்த வாய் மொழி மூல கோரிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது என பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தமது கோரிக்கைகளுக்கு இது வரையில் அரசாங்கம் உரிய பதிலளிக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

(அ-2)

# விபத்து சம்பவங்களில் வருடத்திற்கு 12 ஆயிரம் பேர் வரை உயிரிழப்பு

(கொழும்பு)

இலங்கையில் விபத்துச் சம்பவங்களின் மூலமாக வருடத்திற்கு 12 ஆயிரம் பேர் உயிரிழப்பதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இந்த தகவல்களை குறிப்பிட்டார்.

இவற்றில் நூற்றுக்கு 22 வீதமான உயிரிழப்புக்கள் வாகன விபத்துச் சம்பவங்களின் மூலமாக நேர்வதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

விபத்துக்களின் மூலமாக உலகம் முழுவதிலும் 5.5 மில்லியன் மக்கள் உயிரிழப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

விபத்துச் சம்பவங்களை குறைத்துக் கொள்வதற்கு அதிகாரிகள், மக்கள் என அனைத்து தரப்பினரும் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

(அ-2)

# 2012.07 29 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★1014-பைசண்டைன் பேரரசன் இரண்டாம் பசில் பல்கேரிய இராணுவத்தினரைத் தோற்கடித்தான்.

★1030-டானியர்களிடம் இருந்து தனது முடியாட்சியைக் காப்பாற்றும் முகமாக நோர்வேயின் இரண்டாம் ஒலாப் சமரில் ஈடுபட்டு இறந்தான்.

★1567-முதலாம் ஜேம்ஸ் ஸ்கொட்லாந்தின் மன்னனாக முடிசூடினான்.

★1830-பிரான்சின் பத்தாம் சார்ல்ஸ் முடி துறந்தான்.

★1848-அயர்லாந்தில் ''டிப்பெரரி'' என்ற இடத்தில் பிரித்தானிய ஆட்சிக்கெதிரான கிளர்ச்சி அடக்கப்பட்டது.

★1851-15 யுனோமியா என்ற சிறுகோள் கண்டுபிடிக்கப்பட்டது.

★1899-முதலாவது ஹேக் ஒப்பந்தம் நெதர்லாந்தில் ஹேக் என்ற இடத்தில் கைச்சாத்திடப்பட்டது.

★1900-இத்தாலியில் முதலாம் உம்பேர்ட்டோ மன்னர் கொலைசெய்யப்பட்டார்.

★1907-சேர் பேடன் பவல் இங்கிலாந்தில் சாரணர் இயக்க முகாம் ஒன்றைத் திறந்து வைத்தார். இதுவே சாரணர் இயக்கத்தை ஆரம்பிக்க முதற்படியாக இருந்தது.

★1921-ஹிட்லர் ஜேர்மன் தேசிய சோசலிச தொழிலாளர் கட்சியின் தலைவரானார்.

★1944-இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது.

★1948-இரண்டாம் உலகப்போர் காரணமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஒலிம்பிக் விளையாட்டுக்கள் மீண்டும் லண்டனில் ஆரம்பமாகின.

★1957-அணு சக்தியின் அமைதி வழி பயன்பாட்டினை ஊக்குவிக்கும் முகமாக பன்னாட்டு அணுசக்தி முகமையகம் அமெரிக்காவில் ஆரம்பிக்கப்பட்டது.

★1959-ஐக்கிய அமெரிக்காவின் விண்வெளி நிறுவனம் நாசா ஆரம்பிக்கப்பட்டது.

★1967-வடக்கு வியட்நாமியக் கரையில் ஃபொரெஸ்டல் என்ற அமெரிக்கக் கடற்படைக் கப்பல் தீப்பிடித்ததில் 134 பேர் உயிரிழந்தனர்.

★1967-வெனிசுவேலா நாட்டின் 400 ஆம் ஆண்டு நிறைவு நாள் கொண்டாட்டங்களின் நான்காம் நாளில் அங்கு இடம்பெற்ற நிலநடுக்கத்தில் 500 பேர் உயிரிழந்தனர்.

★1981-வேல்ஸ் இளவரவர் சார்ள்ஸ்-டயானா திருமணம் நடைபெற்றது.

★1987-ஆங்கிலக் கால்வாயூடாக யூரோ சுரங்கம் அமைப்பதற்கான உடன்படிக்கையில் ஐக்கிய இராச்சிய பிரதமர் மார்கரட் தாட்சர் மற்றும் பிரான்ஸ் ஜனாதிபதி பிரான்சுவா மித்தரான் ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

★1987-இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வாக இலங்கை-இந்திய ஒப்பந்தம் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இலங்கை முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவுக்கும் இடையில் கொழும்பில் கைச்சாத்திடப்பட்டது.

★1987-இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொழும்பில் இடம்பெற்ற மரியாதை அணிவகுப்பின்போது இலங்கை இராணுவத்தினர் ஒருவரால் துப்பாக்கியால் தலையில் குத்தப்பட்டு காயம் அடைந்தார்.

★1999-இலங்கையின் தமிழ் அரசியல்வாதி நீலன் திருச்செல்வம் தற்கொலை குண்டுவெடிப்பில் படுகொலை செய்யப்பட்டார்.

★2005-ஏரிஸ்(குறுங்கோள்) கண்டுபிடிக்கப்பட்டது.

### பிறப்புகள்

★1883-முசோலினி, இத்தாலிய சர்வாதிகாரி (இ.1945)

★1905-டாக் ஹமாட்ஷெல்ட், ஐக்கிய நாடுகள் அவையின் 2 ஆவது பொதுச் செயலர் (இ.1961)

### இறப்பு

★1913-டோபியாஸ் மைக்கல் ஆசர், நோபல் பரிசு பெற்றவர்(பி.1838)



பேடன் பவல்

ராபர்ட் பேடன் பவல் பிரபு ஸ்கவுட் எனப்படும் சாரணர் இயக்கத்தை உருவாக்கியவர் ஆவார். இவர் இங்கிலாந்தில் பிறந்த ஆங்கிலத் தளபதி. 1906 ஆம் ஆண்டு சாரணர் இயக்கத்தை உருவாக்கினார். 1910 இல் சிறுமிகள் சாரணர் இயக்கத்தையும் தொடங்கினார்.

### வாழ்க்கைக் குறிப்பு

ரெவறண்ட் பேடன் பவல் மூன்றாவது திருமணத்தில் பிறந்த பத்துக்குழந்தைகளில் எட்டு ஆண்கள். அந்த ஆண்களில் ஏழாவதாகப் பிறந்தவர் பேடன் பவல். இவருக்கு மூன்று வயதாக இருக்கும் போது இவரது தந்தையார் காலமானார். காலமானவரைக் கௌரவிப்பதற்காகப் பவல் என்றிருந்த குடும்பப் பெயர் பேடன் பவல் ஆக்கப்பட்டது. புலமைப்பரிசில் பெற்று சார்ட்டார்ஹவுஸ் பாடசாலையில் கல்வி கற்ற பேடன் பவல் 1876 இல் பிரித்தானிய இராணுவத்தில் இணைந்தார். 1910 இல் ஓய்வு பெற்றார். 1941 இல் கென்யாவில் காலமானார்.

சிறுவர்களுக்கான சாரணீயம் என்ற நூலை 1908 ஆம் ஆண்டு பதிப்பித்தார். ஆபிரிக்காவிற்குத் திரும்பிய பேடன் பவல் தனது புத்தகமான எய்ட்ஸ்டு ஸ்கவுட்டிங் வெற்றிகரமாக விற்பனை ஆவதனையும் அவை பல இளைய மற்றும் ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்குப் பயன்படுவதனையும் கண்டார். 1907 ஆம் ஆண்டு சாரணீயம் ஓர் சோதனை முயற்சியாக 22 சிறுவர்களுடன் தொடங்கியது. முதலில் தேசிய ரீதியில் ஆரம்பிக்கப்பட்ட இம்முயற்சி பின்னர் உலக அளவில் புகழ்பெற்றது.

1920 இல் முதலாவது உலக சாரணீயம் ஜம்போரியானது ஒலிம்பியாவில் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் ஆலயச்சூழலில்...

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் மஹோற்சவத்தின் ஆறாம் நாளாகிய இன்று ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் ஆலயம் தானும் அரன் எனத் தொழுமே எனும் தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவினை சைவப் புலவர் கந்தசத்தியதாசன் ஆற்றுவார்.

பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை நடைபெறவுள்ள இந்நிகழ்வில் சங்கானை வெல்வில் அறநெறிப் பாடசாலை, திடப்புலம் நரசிங்க வைரவர் அறநெறிப் பாடசாலை, கோண்டாவில் ஸ்ரீ கணேசா அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெறும்.

★★★★★★★★★★★★★★★★★★★★★

நல்லூர் முருகன் ஆலய மஹோற்சவத்தின் ஆறாம் நாளாகிய இன்று ஞாயிற்றுக்கிழமை நல்லூர் துர்க்கா தேவி மணிமண்டபத்தில் மாலை 6.45 மணி தொடக்கம் இரவு 7.45 மணி வரை திருமுறைக் கச்சேரி நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பாட்டு எஸ்.சிவஞானராசா, வயலின் திருமதி வனஜா ஈஸ்வரசர்மா, மிருதங்கம் பிரம்ம ஸ்ரீ எஸ்.வரதராச சர்மா, கெஞ்சிரா ரி.சண்முகசுந்தரம் ஆகியோர் அணிசெய் கலைஞர்களாக கலந்து கொள்ளவுள்ளனர்.

★★★★★★★★★★★★★★★★★★★★★

நல்லூர் முருகன் ஆலய மஹோற்சவத்தின் ஆறாம் நாளாகிய இன்று ஞாயிற்றுக்கிழமை நல்லூர் வடக்கு வீதியிலமைந்துள்ள நடராசா பரமேஸ்வரி மணிமண்டபத்தில் மாலை 6.30 மணிக்கு சைவத்தமிழ் பண்பாட்டுக் கழகம் நடத்திவரும் தெய்வீகப் பேருரையில் முருக வழிபாடு எனும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவினை கலாநிதி மா.வேதநாதன் ஆற்றுவார். (அ-9)

# வேட்பாளர்களை மீண்டும் மிரட்டினால் நடவடிக்கை

## தேர்தல் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டபின் பிரச்சினைகள் தணிந்துள்ளதால் மட்டக்களப்பில் மிரட்டல் கடிதங்கள் ஆயுத குழுக்கள் பற்றி செய்யப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படமாட்டாது என தேர்தல்கள் திணைக்களம் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.

கட்சிகளின் செயலாளர்களுக்கும் தேர்தல்கள் ஆணையாளருக்கும் இடையில் நடந்த கூட்டத்தின் போது மேற்படி முறைப்பாடுகள் குறித்து ஆராயப்பட்டது. இந்த பிரச்சினைகளை ஆராய்வதற்கு தேர்தல்கள் ஆணையாளர் ஓர் உயர்மட்ட குழுவை அனுப்பியிருந்தார்.

அக்குழுவினர் வேட்பாளர்கள் மற்றும் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் கூட்டமொன்றையும் நேற்று முன்தினம் நடத்தினர். வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டபின் மிரட்டல் கடிதங்கள் வருவதில்லை என இக்கூட்டத்தில் வேட்பாளர்களும் கட்சிகளின் பிரதிநிதிகளும் கூறியதையடுத்து மீண்டும் மிரட்டல் விடுக்கப்பட்டால் மாத்திரமே நடவடிக்கை மேற்கொள்வதென தீர்மானிக்கப்பட்டது.

எனினும் வேட்பாளர்கள் மீண்டும் மிரட்டப்பட்டால் கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ-2)

## ஆஸி. செல்ல முற்பட்ட 47 பேர் கைது

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்குசெல்ல முயற்சித்த 47 பேர் இலங்கை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் 28 பேர் நேற்று முன்தினமிரவு கொழும்பு முகத்துவாரம் கடற்பரப்பில் வைத்துகைது செய்யப்பட்டதாக கடற்படையின் பேச்சாளர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார்.

இதேவேளை அவுஸ்திரேலியாவுக்கு செல்ல தயாராக இருந்த 19 பேர் நீர்கொழும்பில் கைது செய்யப்பட்டுள்ளனர். முகத்துவாரத்தில் கைதுசெய்யப்பட்டவர்கள்மீன்பிடித் துறைமுகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டதாகவும் அவர் [illegible]றினார். (அ-2)


UK Student / Family Visa



இன்று வெளிநாடு செல்வதில் பல தடைகள் இருந்தாலும் எந்தவித சிரமமும் இன்றி அனைத்து ஏற்பாடுகளையும் உடனடியாக செய்து கொள்ளக்கூடிய முறையில் அனைத்துவித செலவுகளையும் VISA கிடைத்த பின்பு செலுத்தக்கூடிய முறையில் இயங்கும் ஒரே ஒரு நிறுவனம் எங்கள் நிறுவனம் ஆகும்.

STUDENT VISA



மாணவ, மாணவிகளே வெளிநாடு சென்று கல்வி கற்பதற்கு தகுதி இருந்தும் B1, B2 சான்றிதழ் இல்லையா? கவலையே வேண்டாம் கீழே உள்ள முகவரிக்கு தாய் அல்லது தகப்பனுடன் நேரில் வாருங்கள் முற்கொடுப்பனவோ பகுதி கொடுப்பனவோ ஏதும் இல்லை முற்றிலும் VISA கிடைத்த பின்பு

COLLEGE PAYMENTS, EMBASSY FEE, SPONSOR ARRANGEMENTS

லண்டனில் உள்ள (கணவனுடனோ அல்லது மனைவியுடனோ) ஒன்று சேர்வதற்கான VISA வைப் பெற்றுக் கொள்வதற்கு A 1 சான்றிதழ் அவசியம். அது உங்களிடம் இல்லையா? கவலையே வேண்டாம். கீழே உள்ள முகவரிக்கு நேரில் வாருங்கள்.

மாணவ விசாவில் செல்பவர்களுக்கு வாரத்திற்கு 10 மணித்தியால வேலை உத்தரவாதம்

15 வருடங்களுக்கு மேல் அனுபவம் வாய்ந்த நிறுவனம் என்பதை மிகவும் பெருமையுடன் அறியத்தருவதுடன்

மேலதிக விபரங்களுக்கு

HOTLINE-0214921831,0214921832



அனி இன்டர்நேஷனல் எடியுகேஷன் கன்சல்டன் சர்விஸ்

இல.19,3 ஆவது மாடி (மக்கள் வங்கி கட்டடம்) ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி/636)


# நல்லூரான் திருவடிக்கு

## இன்று ஆறாம் திருவிழா



## "ஒரு ரூபாய் போதுமடா"



கோடி இருந்துதான் என்ன?
மாடி இருந்துதான் என்ன?
ஈடிலாத முருகனிடம்
ஓடி வந்து நிற்கிறாய்!

கோடியும் வேண்டாம்
மாடியும் வேண்டாம்
ஈடிலாத முருகனுக்கு
ஒரு ரூபாய் போதுமடா!

அடுக்குச் சங்கிலி என்ன?
மடிப்புச் சங்கிலி என்ன?
அழகு முருகனிடம் யாவுமுண்டு!
ஆசை வேண்டாம் – நல்லூரில்

*கே.எஸ். சிவஞானராஜா, கொக்குவில்.*

## இன்னல்களை போக்கிடுவாய் ஆறுமுகா!

வள்ளி தெய்வயானையுடன் உலா வரும் முருகா!
வரம் எமக்கு தந்திடுவாய் பதியினிலே
துணைவியர் இருவருடன் காட்சி தந்த கந்தா
கருணைக் கண் கடலில் உறைபவனே
ஆறுமுகம் கண்டு அடி எடுத்த பக்தர்
அருள் வேண்டி உன்பாதம் சரணடைந்து
நல்லைத் தலத்தினிலே தனிய மர்ந்த குமரா
இன்னல்களை போக்கிடும் தெய்வமே போற்றி

*ந.கௌரி, அச்சுவேலி.*

## வினை தீர்ப்பான் முருகன்

நல்லூரான் சன்னிதிக்கு நாளும் வருபவரின்
தொல்லைவினை தீருமென்று சொன்னார்கள் மேலோர்கள்
சொல்லி வைத்த யாவருமே தூயவராம் ஞானியர்கள்
செல்லப்பர் உள்ளிட்ட சித்தர் பரம்பரையோர்
நல்ல மகான்கள் நடம்புரிந்த மண்ணுக்கு
நல்ல மகிமையுண்டு நாடுவோம் நல்லூரை
வல்வினையோம் சென்று வழிபாடு செய்வதொன்றே
தொல்லை வினையறுக்க தூய வழியாகும்

*சி.வெற்றிவேலு, வட்டுக்கோட்டை.*

## எங்கும் நீதான் வேல் முருகா!



எங்கும் நீதான் வேல்முருகா
எல்லாம் நீதான் சிவசண்முகா!
அன்பனும் நீதான் வேல்முருகா
நண்பனும் நீதான் சிவசண்முகா!
அப்பனும் நீதான் வேல்முருகா
அம்மையும் நீதான் சிவசண்முகா!
குருவும் நீதான் வேல் முருகா
கூடவரும் உறவு நீதான் சிவசண்முகா!
உன்னையே நம்பினோம் வேல்முருகா
உருக்குலைந்த எங்கள் வாழ்வை
ஓங்கச் செய்வாய் சிவசண்முகா!

*செ.ரவிசாந், குப்பிளான்.*

## நிம்மதியைத் தா

சரவணப் பொய்கையில் மலர்ந்தவனே
கார்த்திகைப் பெண்களிடம் வளர்ந்தவனே
நல்லூர் நகரில் இருப்பவனே
மக்கள் நலனைக் காப்பதற்கு
தினமும் மயிலேறி வருவாயா

*க.செல்வமலர், திருநெல்வேலி.*


நல்லைக் கந்தனே எம்மைக் காத்து வரம் அருள்வாய்

ஆர்.வி.ஜி மருந்தகம்
504, ஆஸ்பத்திரி வீதி,
(O.P.D முன்பாக)
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 021 222 2129




ஆங்கில மருந்து வகைகள், ஊட்டச்சத்துக்கள் மற்றும் பால்மா வகைகள் அனைத்தையும் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

R.V.G ஸ்தாபனம்
58, நல்லூர் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
தொ. பே. இல: 021 222 6806


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 202





2 ஆம் உலக யுத்தத்த நினைவுச்சிலைகள்- சோவியத் யூனியன்




சோவியத் யூனியனின் கடற்படையை நினைவுகூரும் ஆலயம்

ஹிட்லரின் தோல்வி- பாசிச இராணுவம், பாசிச நெறியின் தோல்வியைக் குறித்த போராட்டத்தின் முடிவு- வட ஆபிரிக்க பாலைவனங்களிலோ அல்லது நார்மண்டியின் கரைகளிலோ நடந்த சண்டைகளில் அல்ல, மாறாக ஸ்டாலின்கிராட்டிலும் லெனின்கிராடிலும் கூர்ஸ்கிலும் நடந்த சண்டைகளில் முன் நிர்ணயிக்கப்பட்டது. ஹிட்லரைப் பொறுத்தவரை பிரிட்டனோஅல்லது வட ஆபிரிக்காவோ இரண்டாம் பட்ச முக்கியத்துவம் உடையவையாக மட்டுமேயிருந்தன. ருஷ்யாவால் அவன் வெற்றி கொள்ளப்பட்டான் என்று பிரிட்டிஷ் முற்போக்கு எழுத்தாளர் பீர்ஸ்போல்ரீட் குறிப்பிட்டார்.

உலகிலுள்ள நேர்மையான மனிதர்கள் அனைவரும் இந்த மதிப்பீட்டின் கீழ் கையெப்பமிடலாம். ஆனால், பூர்ஸ்வா சித்தாந்தவாதிகள், சோவியத் மக்களின் வீரஞ்செறிந்த போராட்டம், பாசிசத்தை முறியடித்ததில் இவர்களின் தீர்மானகரமான பங்கு ஆகியவற்றைப் பற்றிய உண்மையை எப்படியாவது மக்களிடமிருந்து மறைக்கப் பார்க்கின்றனர். உலக வரலாற்றிலேயே மிகப் பெரிய ஓர் இராணுவ நடவடிக்கையின் போது கிழக்கே- சோவியத் யூனியனால்- இரண்டாவது உலக யுத்தம் முடித்து வைக்கப்பட்டது என்ற உண்மையை மேலைய நாட்டு வாசகர்களில் பெரும்பாலோர் இன்னமும் உணரவில்லை என்று 1978 ஆம் ஆண்டு லண்டனில் வெளியான ருஷ்யப்போர்முனை எனும் நூலின் சுருக்கத்தில் கூறப்பட்டுள்ளது.

ஏகாதிபத்திய சித்தாந்தவாதிகள் சகலவிதங்களிலும் இதற்குத் தடையாக இருப்பதால்தான் இது உணரப்படவில்லை. பாசிச ஜேர்மனியை முறியடித்ததில் சோவியத் யூனியனின் பங்கை குறைத்து கூறும் பூர்ஷ்வா பிரச்சாரம் சோஷலிசத்தையும் இதன் மகத்தான உயிர்ப்புச் சக்தியையும் பற்றிய உண்மையை மக்களிடமிருந்து மறைக்கவும் இரண்டாம் போர் முனையை ஆரம்பிப்பதை இழுத்தடித்ததன் காரணங்களையும் அமெரிக்க, பிரிட்டிஷ் துருப்புகள் சில சமயங்களில் வேண்டுமென்றே கடைப்பிடித்த செயலின்மையையும் அமுக்கவும் கணக்கிடுகிறது.

இன்று மேலைய நாட்டு சித்தாந்தவாதிகள் இரண்டாவது உலக யுத்தத்தில் அமெரிக்க ஐக்கிய நாட்டின் சேவைகளைப் பற்றி மிகவும் சிரமப்பட்டு புகழ்பாடுகின்றனர். ஒரு சில பூர்ஷ்வா கட்டுரையாளர்களும் வரலாற்றாசிரியர்களும் யுத்த காலத்தில் அமெரிக்காவை முதல் வல்லரசு என்றும் நேச நாட்டவரின் வெற்றிக்கு வழிகோலிய நாடு என்றும் சித்தரிக்கிறார்கள். பிரபல அமெரிக்க வரலாற்று நிபுணரும் பத்திரிகையாளருமாகிய போல்டுயினின் கூற்றுப்படி இரண்டாவது உலக யுத்தத்தில் பங்கேற்ற அரசுகளிலேயே அமெரிக்க ஐக்கிய நாடுதான் சந்தேகத்திற்கிடமின்றி மிக வலிமையான வல்லரசாக இருந்தது. எனவே, வெற்றியில் அமெரிக்காவின் பங்கு ஏதோ நிர்ணயிக்கப்பட்டதாம்.



சோவியத் யூனியனின் 2 ஆம் உலகயுத்த நினைவாலயம்

உண்மைக்கு அப்பாற்பட்ட இத்தகையக் கூற்றுகளின் உதவியால் 1941- ஆம் ஆண்டில் பாசிச ஆக்கிரமிப்பை முறியடித்ததில் சோவியத் மக்களின் வீரஞ்செறிந்த போராட்டத்தின் முக்கியத்துவத்தைக் குறைக்க மட்டுமின்றி பிரிட்டிஷ்-அமெரிக்கத் தலைமையின் போர்த் தந்திரத்தை நியாயப்படுத்தவும் முயற்சி செய்யப்படுகிறது. அக்காலகட்டத்தில் சோவியத் யூனியனின் தோல்வி தவிர்க்க இயலாதது என்று கருதிய இத்தலைமை, விமான குண்டு வீச்சுகள், பொருளாதார முற்றுகை, மட்டான தாக்குதல் நடவடிக்கைகள் மூலம் ஜேர்மனியை முறியடிக்கலாம் என்று ஆதாரமின்றி நம்பியது.

நிச்சயமாக, பாசிச கூட்டு அரசுகளுக்கு எதிராக அமெரிக்க ஐக்கிய நாடு யுத்தத்தில் இறங்கிய பின் ஹிட்லர் எதிர்ப்பு கூட்டணியின் உள்ளாற்றல் அதிகரித்தது. ஆனால், இதுதான் பாசிசக் கூட்டை முறியடிப்பதில் தீர்மானகரமான காரணியாக விளங்கியது என்று கூற எவ்வித ஆதாரமும் கிடையாது. வீரஞ் செறிந்த போராட்டத்தின் விளைவாய் சோவியத் யூனியனுக்கு எதிரான ஹிட்லரின் மின்னல்வேக யுத்த திட்டத்தை சோவியத் இராணுவம் முறியடித்து, பாசிச ஆக்கிரமிப்பு மற்ற நாடுகளுக்கும் கண்டங்களுக்கும் பரவாது தடுத்து நிறுத்திய ஒரு நேரத்தில்தான் அமெரிக்க ஐக்கிய நாடு யுத்தத்தில் இறங்கியது என்பதை நினைவுகூர வேண்டும்.

அமெரிக்க ஐக்கிய நாடு யுத்தத்தில் இறங்கும் முன்னதாகவே 1941 ஆம் ஆண்டு டிசம்பர் 5 ஆம் திகதி சோவியத் துருப்புகள் மாஸ்கோ அருகே தீர்மானகரமான எதிர்த்தாக்குதலில் இறங்கின. 1942 ஆம் ஆண்டு ஜனவரி 20 ஆம் திகதி லண்டன் வானொலியில் உரையாற்றுங்கால் ஜெனரல் டெகோல், மாஸ்கோ அருகே பாசிச எதிரி, வரலாறு இதுவரை அறிந்தவற்றிலேயே, மிகப் பயங்கர தோல்வியை அடைந்தான் என்று குறிப்பிட்டார்.

(தொடரும்)

# யுத்தத்தின் முடிவுகளும் யுத்தம் கற்பித்த பாடங்களும்

### யுத்தத்தின் முடிவுகளும் யுத்தம் கற்பித்த பாடங்களும்

சோவியத் இராணுவத்தின் பலத்த தாக்குதல்களின் கீழ்தான் பாசிசக் கூட்டு தகர்ந்து விழுந்தது. செஞ்சேனையின் வெற்றிகளின் பயனாய் மன்னராட்சியின் கீழிருந்த ருமேனியா, ஜாரிச பல்கேரியா, மான்னர்கேய்ம பின்லாந்து, ஹோர்டிஸ்டு ஹங்கேரி ஆகிய நாடுகள் பாசிச ஜேர்மனிக்கு ஆதரவான யுத்தத்திலிருந்து வெளிவந்தன.

யுத்தம் என்பது இரு தரப்புகளுக்கிடையேயானது. எனவே, பாசிச ஜேர்மனியை வெற்றி கொள்வதற்காக ஹிட்லர் எதிர்ப்புக் கூட்டணி அரசுகளுக்கு ஏற்பட்ட சேதத்தின் அளவையும் கணக்கில் கொள்ள வேண்டும். சோவியத் யூனியனுக்குத்தான் மிகப்பெரும் இழப்பேற்பட்டது. சண்டைகளிலும் பாசிச முகாம்களிலும் சிறைக் கூடங்களிலும் 20 மில்லியன் சோவியத் மக்கள் இன்னுயிர் ஈந்தனர். பிரிட்டிஷ் தரப்பில் 370,000 நபர்களும் அமெரிக்க ஐக்கிய நாட்டின் தரப்பில் 400,000 நபர்களும் மாண்டனர்.

இவையனைத்தும் இரண்டாவது உலக யுத்தத்தில் சோவியத்- ஜேர்மனியப்போர் முனையின் தீர்மானகரமான பங்கிற்கு நன்கு சான்று பகர்கின்றது.

சோவியத் யூனியனின் செங்கொடி நினைவுச்சிலை (பாறையில் - செதுக்கப்பட்டது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தாக்கல் செய்த வழக்கு தோல்வி

லண்டன் வணிக நீதிமன்றத்தில் ஸ்டாண்டட் சாட்டட் வங்கிக்கு எதிராக தாக்கல் செய்த வழக்கில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனம் தோல்வியடைந்துள்ளது.

ஹெஜிங் உடன்படிக்கையின்படி இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 162 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் அதற்கான வட்டியையும் செலுத்த வேண்டும். இதற்கு 'எதிரான வழக்கிலேயே இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தோல்வியடைந்துள்ளது.

கடந்த 2007 இல் உலக சந்தையில் எரிபொருள் விலை உயர்வடைந்து கொண்டிருந்த போது வங்கிகளிடம் இழப்பீடு பெறும் வகையில் ஹெஜிங் உடன்படிக்கை செய்ய இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் ஆரம்பித்தது.

ஆனால், உலக சந்தையில் எரிபொருள் விலை குறைவடைந்தால் உடன்படிக்கை செய்து கொண்ட வங்கிகளுக்கு இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் பணம் வழங்கும் வகையில் இந்த உடன்படிக்கை செய்யப் பட்டிருந்தது.

பிரிட்டனை தளமாக கொண்ட ஸ்டான்டர்ட் சார்டர்ட் வங்கி, சிட்டி பாங்க், டொச் பாங்க் உட்பட 5 வங்கிகளுடன் ஹெஜிங் உடன்படிக்கை செய்யப்பட்டது.

கடந்த 2008 ஜூலையில் உலக சந்தையில் ஒரு பீப்பா மசகு எண்ணெய் 147 டொலர் வரை உயர்ந்த நிலையில் இந்த உடன்படிக்கை மூலம் சி.பி.சி. நன்மை பெற்றது. ஆனால், அதே வருட பிற்பகுதியில் மசகு எண்ணெய் விலை 40 டொலரை விட குறைந்ததால் பெருந்தொகை பணத்தை வங்கிகளுக்கு சி.பி.சி. செலுத்த வேண்டியிருந்தது.

இந்த உடன்படிக்கையின் படி பணத்தை வழங்க சி.பி.சி. மறுத்ததாக குற்றம் சுமத்தி ஸ்டான்டர்ட் சார்ட்டட் வங்கி வழக்கு தொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பில் பெற்றோலியத்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மேன்முறையீடு செய்வது குறித்து சட்டமா அதிபர் திணைக்களத்துடன் நாம் கலந்தாலோசித்து வருவதாக தெரிவித்துள்ளார். (அ-2)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யா/உயரப்புலம் மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் வித்தியாலயத்தின் பரிசில் தினம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு வித்தியாலய பிரதான மண்டபத்தில் வித்தியாலய அதிபர் கு.திலீபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், சிறப்பு விருந்தினர்களாக பழைய மாணவர்களான எஸ். பிறேமானந்தசுந்தர், திருமதி சாந்தா சுகிர்தரஞ்சன், கௌரவ விருந்தினர்களாக பழைய மாணவர்களான து.யோதிராசா, சோ.ஜெயராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

பிரதம விருந்தினரின் பாரியார் திருமதி கிருபாகரி இளங்கோவன் பரிசில் வழங்கி கௌரவிக்கவுள்ளார். (அ-9)

## அகதிகளை திருப்பி அனுப்புங்கள் ஆஸியிடம் இலங்கை கோரிக்கை

இலங்கையிலிருந்து சட்டவிரோதமாக படகுகள் மூலம் செல்லும் அகதிகளை திருப்பியனுப்புமாறு அவுஸ்திரேலியாவிடம் இலங்கை கடற்படையின் புலனாய்வு பணிப்பாளர் நிசாந்த உலுகத்தென கோரியுள்ளார்.

கடத்தல்காரர்களை தடுக்கும் வகையில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு அவுஸ்திரேலிய அரசாங்கம் உடன்பட வேண்டும் என்று இலங்கை அரசாங்கம் கேட்டுள்ளது.

கடற்பரப்பில் ஆட்கடத்தல்களில் ஈடுபடுவோரை தடுப்பதில் நடைமுறை சிக்கல்கள் எதிர்நோக்கப்படுகின்றன.

அவுஸ்திரேலிய கடற்பரப்புக்கு அகதிகள் சென்ற பின்னர் அவர்களை இலங்கை கடற்படையினரால் தடுக்க முடியாது. எனவே, தமது நாட்டுக்குள் பிரவேசிக்கும் இலங்கை அகதிகளை திருப்பி அனுப்ப வேண்டும்.

கடந்த 6 மாதங்களில் மாத்திரம் இலங்கையில் இருந்து ஆயிரத்து 500 பேர் அவுஸ்திரேலியாவுக்கு படகுகள் மூலம் சென்றுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ-2)

## அவதூறு வழக்கில் வைகோவை ஆஜராகுமாறு நீதிமன்றம் உத்தரவு



அவதூறு வழக்கில் வைகோ ஆஜராக வேண்டும் என்று செஷன்ஸ் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டு மே 31 ஆம் திகதி புரசைவாக்கத்தில் தமிழீழ ஆதரவு தொடர்பாக நடந்த பொதுக் கூட்டத்தில் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ பேசும் போது,

அப்போதைய முதல்வர் கருணாநிதியின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் பேசியதாக அவதூறு வழக்கு தொடரப்பட்டது. 7 ஆவது கூடுதல் செஷன்ஸ் நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணையில் உள்ளது. இந்த வழக்கு நீதிபதி கலியமூர்த்தி முன்னியையில் நேற்று முன்தினம் மீண்டும் விசாரணைக்கு வந்தது. சட்டத்தரணி தேவதாஸ் ஆஜராகி வைகோ சார்பில் நேரில் ஆஜராவதிலிருந்து விலக்கு அளிக்கக் கோரி மனுத்தாக்கல் செய்தார்.

அரசு சட்டத்தரணி எம்.எல்.ஜெகன், அரசு சிறப்பு சட்டத்தரணி எம்.கே.அசோகன் ஆகியோர் ஆஜராகி வழக்கில் சாட்சி விசாரணை நடத்த வேண்டும் என்று கோரினர். இதையடுத்து வழக்கை எதிர்வரும் ஓகஸ்ட் 23 ஆம் திகதிக்கு தள்ளி வைத்த நீதிபதி அன்றைய தினம் சாட்சிகள் விசாரணை நடத்தப்படும். வைகோ ஆஜராக வேண்டும் என்று உத்தரவிட்டார். (அ-2)

## புகலிடம் கோருவதற்காக புலியாக நடித்த இளைஞன்

புகலிடம் கோருவதற்காக விடுதலைப்புலி உறுப்பினராக நடித்தேன் என புகலிட கோரிக்கை மறுக்கப்பட்ட நிலையில் அவுஸ்திரேலியாவிலிருந்து இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ள தயான் அந்தனி தெரிவித்துள்ளார்.

நான் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர் அல்ல. ஆனால், போலி விசாவில் என்னை அவுஸ்திரேலியாவுக்கு அனுப்பிய முகவர் என்னை விடுதலைப்புலி உறுப்பினர் போல் நடிக்கும் படியும் எல்லோரிடமும் அப்படியே கூறும்படியும் எனக்கு கூறியிருந்தார் என தயான் அந்தனி கூறினார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இவர் பொலிஸாரின் தடுப்பிலிருந்து விடுவிக்கப்படுவதற்கு சில மணித்தியாலங்களுக்கு முன்னரே ஊடகவியலாளர்களை சந்தித்து மேற்கண்டவாறு கருத்து தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் இலங்கை வந்தடைந்ததும் பொலிஸார் இவரை சில மணித்தியாலங்கள் தடுத்து வைத்து வாக்கு மூலங்களை பதிந்த பின்னர் விடுதலை செய்தனர்.

பொலிஸார் என்னை விசாரித்ததன் பின்னர் பூசா முகாமுக்கு அனுப்புவர் என நான் நினைத்தேன். ஆனால், அவர்கள் அவ்வாறு செய்யவில்லை.

பொலிஸார் என்னை நல்ல முறையில் நடத்தினர். அவர்கள் என்னை விடுதலை செய்யப் போகின்றனர். நான் மீண்டும் சுதந்திர மனிதன் ஆவேன் என்று தயான் அந்தனி குறிப்பிட்டார்.


தயான் அந்தனியின் வாக்குமூலத்தை பதிவு செய்த பின்னர் அவரை தாம் விடுதலை செய்துவிட்டதாக பொலிஸார் கூறினர். (எ-11)

## அதிவேக நெடுஞ்சாலையில் விபத்து; ஒருவர் உயிரிழப்பு

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் ஏற்பட்ட வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். இவ்விபத்து நேற்று முன்தினமிரவு 10.45 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

காலியிலிருந்து கொட்டாவ நோக்கி பயணித்த பிக்கப் வாகனம் தடம்புரண்டதில் இவ்விபத்து நேர்ந்துள்ளது. பிக்கப் வாகனத்தின் சாரதி அதே வாகனத்தின் கீழ் சிக்கி உயிரிழந்துள்ளார்.

விபத்து இடம்பெற்ற வேளையில் வாகன சாரதி வாகனத்திலுள்ள பாதுகாப்பு பட்டியை அணிந்திருக்கவில்லை என பொலிஸார் தெரிவித்தனர். (அ-2)








யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தின் நான்காம் அணி இரண்டாம் வருட மாணவர்களின் பயிற்சி இதழான **எழுத்தாணி சஞ்சிகை** வெளியீடு நேற்று முன்தினம் ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் வி.பி.சிவநாதன் சஞ்சிகையினை வெளியிட்டு வைக்க சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட சுவீடன் நாட்டு ஊடக நிறுவனமான போயோ நிறுவனத்தின் இலங்கைக்கான நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் திருமதி பிஃயோனா பாண்டன் சஞ்சிகையினை பெற்றுக் கொள்வதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- உ.சாளீன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மஹிந்த சிந்தனையின் ஆயிரம் பாடசாலை அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் மாவட்டத்திற்கு ஒரு பாடசாலை என்ற அடிப்படையில் யாழ். மாவட்டத்தில் யா/ வைத்தீஸ்வரா கல்லூரியில் தொழில்நுட்ப ஆய்வுகூட அடிக்கல் நாட்டு விழா நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ. இளங்கோவன் மங்கல விளக்கேற்றுவதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் அடிக்கல் நாட்டுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என். குமார்)

# இரண்டாம் கட்ட எண்ணெய் அகழ்விற்கு கெய்ன்லங்கா தயார்

இலங்கையில் எண்ணெய் அகழ்வாராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும் கெய்ன் லங்கா நிறுவனம் அடுத்தாண்டு நடுப்பகுதியில் இரண்டாம் கட்ட எண்ணெய் அகழ்வு நடவடிக்கையை ஆரம்பிக்கவுள்ளதாக கெய்ன் இந்திய நிறுவனம் தெரிவித்துள்ளது.

600 சதுரகிலோ மீற்றர் பரப்பளவில் 3 தரவுகள் மூலம் அதிர்வுகள் தொடர்பாக தகவல்கள் திரட்டப்பட்டுள்ளதுடன் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளை அடுத்தாண்டு நடுப்பகுதியில் மேற்கொள்ள முடியும் என கெய்ன் லங்காவின் தாய் நிறுவனமான இந்தியா வெளியிட்டுள்ள 2012/ 2013 காலாண்டு அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் மன்னார் கடற்பரப்பில் கெய்ன் லங்கா நிறுவனத்தால் கண்டு பிடிக்கப்பட்ட எரிவாயு கிணறுகளின் வர்த்தக பெறுமதியை பெற்றோலிய வள உடன்படிக்கைக்கு அமைய வெளியிட்டுள்ளது.

30 ஆண்டுகளுக்கு பின்னர் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட வெற்றிகரமான அகழ்வாராய்ச்சி பணிகளாக இவை உள்ளன.

ராஜஸ்தானில் 100 மில்லியன் பீப்பாய்களுக்கு அதிகமான எரிபொருள் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் இது ஒரு மைல் கல்லாகும். எமது உற்பத்தி அதிகரிப்பு காரணமாக எரிபொருள் இறக்குமதிக்கு செலவாகும் நிதியிலிருந்து 9 பில்லியன் அமெரிக்க டொலர்களை குறைத்துக்கொள்ள முடிந்துள்ளது.

அத்துடன் திறைசேரிக்கு 3 பில்லியன் அமெரிக்க டொலர்களையும் நாம் ஈட்டிக் கொடுத்துள்ளோம் என கெய்ன் இந்திய நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ராகுல் தீர் தெரிவித்துள்ளார்.

10 இடங்களில் கெய்ன் அகழ்வாராய்ச்சிகளில் ஈடுபடுகின்றது. இவை அனைத்தும் மூன்று பகுதிகளை உள்ளடக்கிய வகையில் உள்ளது.

ராஜஸ்தானில் ஒரு பகுதியிலும் இந்தியாவின் மேற்கு கரையில் மூன்று இடங்களிலும் கிழக்கு கடற்பரப்பில் ஆறு இடங்களிலும் பணிகள் இடம்பெறுகின்றன. இலங்கையின் ஆழ்கடலில் மேற்கொள்ளப்படும் அகழ்வாராய்ச்சிகளும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஆயிரத்து 753 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் அதிர்வுகள் தொடர்பான தகவல்கள் திரட்டப்பட்டு முதற்கட்டமாக மூன்று கிணறுகள் துளையிடப்பட்டன.

இவற்றின் முடிவுகளின் அடிப்படையில் இரண்டு கிணறுகளிலிருந்து எரிவாயு கண்டெடுக்கப்பட்டது. (அ-2)

## உணவு விசமானதில் 34 பேர் ஆஸ்பத்திரியில்

(கொழும்பு)

மாத்தளை லக்கல பிரதேச பாடசாலை ஒன்றின் மாணவர்கள் உணவு விசமான காரணத்தினால் பாதிக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

31 மாணவர்கள் மற்றும் 3 ஆசிரியர்கள் உள்ளிட்டோர் நேற்று முன்தினம் பிற்பகல் வேளையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக ஹம்பொலை வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

நுவரெலியா பிரதேசத்திற்கு கல்விச் சுற்றுலா சென்றிருந்த நிலையில் உணவகம் ஒன்றில் உட்கொண்ட உணவு விசமானதன் காரணமாக மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ-9)

## பிரபாவுடன் போர் நடத்தியதைவிடவும் ஆபத்தான தருணம் உருவாகியுள்ளது

### தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

பிரபாகரனுடன் போர் நடத்தியதை விடவும் ஆபத்தான தருணம் உதயமாகியுள்ளது. வெட்கம் இருந்தால் 13 ஆம் திருத்தச் சட்டத்தை ஏற்றுக்கொள்ளக் கூடாது என தேசப்பற்றுடைய தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர தெரிவித்துள்ளது.

இனத் துரோக நடவடிக்கைகளை கட்டுப்படுத்தாவிட்டால் நாடும் இனமும் அழிவுப் பாதையில் செல்வதனை தடுக்க முடியாது.

இந்தியா, ஐரோப்பா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகள் இலங்கை பிளவடைவதனையே விரும்புகின்றன.

பிரபாகரன் கொல்லப்பட்டதனைத் தொடர்ந்து 13 ஆம் திருத்தச் சட்டத்தை இல்லா தொழிப்பதற்காகவே நாம் ஜனாதிபதிக்கு வரையறையற்ற அதிகாரங்களை வழங்கினோம்.

எதிர்வரும் 2018 ஆம் ஆண்டில் சீனா உலக வல்லரசாக மாற்றமடைந்துவிடும்.

இதனால் பீதியடைந்துள்ள அமெரிக்கா இலங்கையில் முகாம் ஒன்றை அமைக்க முயற்சிக்கின்றது.

இதன் காரணமாகவே அமெரிக்கா இலங்கை விவகாரங்களில் தலையீடு செய்து வருகின்றது என மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

(அ-2)

## போதைப் பொருட்களுடன் ஆறு பேர் கைதாகினர்

போதைப்பொருட்களை கடத்தி வந்த இந்திய படகொன்று மன்னார் கடற்பகுதியில் வைத்து கடற்படையினரிடம் சிக்கியுள்ளது. இதில் இருந்து 29 கிலோ 675 கிராம் கஞ்சாவும் (கேரளத்து கஞ்சா) 399 கிலோ புகையிலைத் தூள் என்பன மீட்கப்பட்டதோடு இரு இந்தியர்களும் 4 இலங்கையர்களும் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கல்பிட்டி பத்தலம் குண்டுவிலில் இருந்து 20 கடல் மைல் தூரத்தில் வைத்தே இவர்கள் கைது செய்யப்பட்டனர். சுங்க சட்டத்திற்கு முரணாக மேற்படி சந்தேக நபர்கள் மன்னார் கடற்பகுதியினூடாக போதைப் பொருட்களை கடத்திச் சென்றுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

கடற்படையினரால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் அறுவரும் நேற்று முன்தினம் கல்பிட்டி பொலிஸில் ஒப்படைக்கப்பட்டனர். சந்தேக நபர்கள் புத்தளம் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

கற்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்துகின்றனர். (அ-2)


## ST.JOHN'S COLLEGE, JAFFNA.
## CHUNDIKULI GIRLS' COLLEGE, JAFFNA.
## ADMISSION-2013 FOR GRADE 1,GRADE 4, GRADE 6 & GRADE 10

**தரம் 01, தரம் 04, தரம் 06, தரம் 10 இற்கான அனுமதி 2013**

01. அ. விண்ணப்பப்படிவங்களை அந்தந்தக் கல்லூரிகளிலிருந்து 16.07.2012 முதல் 15.08.2012 வரை பெற்றுக்கொள்ளலாம்.
 ஆ. எமது விண்ணப்பப்படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.
 இ.விண்ணப்பப்படிவங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 30.08.2012 வியாழக்கிழமை. அத் திகதிக்குப் பின்னர் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டா.
02. தரம்-01 இற்கான விண்ணப்பப்படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி (போட்டோஸ்ரட் கொப்பி) இணைக்கப்படவேண்டும்
03. விண்ணப்பப்படிவங்களை ஞாயிறும், விடுமுறை தவிர்ந் ஏனைய நாட்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 1.00 மணிவரை அந்தந்தக் கல்லூரிகளில் பெற்றுக்கொள்ளலாம்.
04. ஒரு படிவத்திற்கானதும் பரீட்சைக்கானதுமான கட்டணம் ரூபா 1000.00
05. வயதெல்லைகள்
 அ. தரம் 01 விண்ணப்பதாரி 01.02.2007 க்கும் 31.01.2008 க்குமிடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
 ஆ. தரம் 04 விண்ணப்பதாரி 01.02.2004 இல் அல்லது அதற்குப்பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
 இ. தரம் 06 விண்ணப்பதாரி 01.02.2002 இல் அல்லது அதற்குப்பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
 ஈ. தரம் 10 விண்ணப்பதாரி 01.02.1998 இல் அல்லது அதற்குப்பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்
06. தரம் 12 (A/L) 2015 Batch ) விண்ணப்பதாரி 01.02.1996 இல் அல்லது அதற்குப் பின் பிறந்திருத்தல் வேண்டும்.
07. தரம்04, தரம்06, தரம்10 இற்கான பிரவேசப் பரீட்சை 06.10.2012 சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகும்.

குறிப்பு:-

01. தகுதியுடையவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் ஆண்டு 5 புலமைப் பரிசில் நிதி தனியார் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் அரசாங்கத்தால் தொடர்ந்து வழங்கப்படுகிறது. அனுமதிப்பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் பெறும் உதவி தேவைப்படும் மாணவர்களுக்கு குறிப்பிட்ட சில புலமைப்பரிசில்கள் கல்லூரியால் வழங்கப்படும்.

02. தரம் 12 இற்கும்(A/L) 2015Batch தமிழ்/ஆங்கில மொழி மூலம் (விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம்) (விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம்), London A/L 2012 /2013 இற்கும் விண்ணப்பப்படிவங்கள் சென்.ஜோன்ஸ் கல்லூரியினால் ஏற்றுக்கொள்ளப்படும். அனுமதிப்பரீட்சை 05.01.2013 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறும். புதிய வகுப்புக்கள் 09.01.2013 ஆரம்பமாகும். ஆண்டு 1 இல் மும்மொழிக்கற்கை நெறி அறிமுகப்படுத்தப்படுகின்றது.

03.சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் தரம் 12(A/L) (தமிழ்/ஆங்கில மொழி மூலம் 2015Batch) விண்ணப்பதாரிகள் O/L பரீட்சைப் பெறுபேறுகளின் பின்னர் விண்ணப்பிக்கவும்.

(சி-519)

அதிபர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுதலைப் புலிகளின் மீதான தடையும்

# டெசோ மாநாடும்

இரண்டு வருடத்திற்கொரு முறை நடைபெறும் விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடைச் சடங்கு நிறைவேற்றப்பட்டுள்ளது. அதனை நியாயப்படுத்தும் வகையில் பல காரணிகளை இந்திய உள்துறை அமைச்சர் வெளிட்டுள்ளார். இந்திய தேசிய ஒருமைப்பாட்டிற்கும் இறை மைக்கும் தமிழீழக் கோரிக்கை அச்சுறுத்தலாக அமையும் என்பதே இதன் சாராம்சம். இதில் தேசிய ஒருமைப்பாடு என்கின்ற வார்த் தைப்பிரயோகம் விடுதலைப் புலி களையும் அதன் தலைவரையும் முன்னிறுத்தி தமிழகத்தில் மேற் கொள்ளப்படும் ஈழவிடுதலைக்கு ஆதரவான போராட்டங்கள் தமிழ கத்தை இந்தியாவிலிருந்து பிரித்து விடுமோ என்கிற கற்பிதத்தில் உருவாக்கப்பட்டது.

ஆனால், இலங்கையுடன் ஒரு மூலோபாய உடன்படிக்கையை எட்டுவதற்கு தமிழீழ விடுதலை இயக்கங்களுக்கு 1980 களில் உதவி செய்யும்போது இந்த இறைமைப் பிரச்சினையோ அல்லது ஒருமைப் பாட்டுச்சிக்லோ இந்தியாவுக்கு ஏற்படவில்லை. ஆகவே ஈழவிடு தலைப் போராட்டத்தை அழுத்தக் கருவியாகப் பயன்படுத்தி இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை ஏற்படுத் தியதோடு தனது நலனைச் சாதித்துக் கொண்டது இந்தியா.

2006 இற்குப் பின்னர் இலங்கை யில் ஏற்பட்ட மாற்றங்கள் சீனாவின் உள்நுழைவு போன்றவை அடிப் படைக்கோட்பாட்டில் உறுதியாக இருந்த விடுதலைப் புலிகளுக்கெதி ரான நிலைப்பாட்டினை மேற்கொள்ள இந்தியாவை நிர்ப்பந்தித்ததோடு வெளிப்படையாகவே இலங்கை சார்புநிலைமை எடுக்க வைத்தது. ஆனாலும் 2009 முள்ளிவாய்க்கால் தமிழன அழிப்பின் பின்னர் போட்டி வல்லரசுகளின் ஆதிக்கம் அதிகரித்து இந்தியாவை இலங்கை விவகாரத் திலிருந்து தனிமைப்படுத்தும் அள விற்கு சென்றுவிட்டதைக் காணலாம்.

இன்று இராணுவமயமாகும் இலங்கையின் ஆட்சியதிகாரக் கட்டமைப்பு பல எச்சரிக்கைகளை இந்தியாவிற்கு விடுத்துக்கொண் டிருக்கிறது. ஆகவே தாம்பாரத்திலும் குன்னூர் வெலிங்டன் பயிற்சி முகாம்களிலும் இலங்கைப் படை யினருக்கு பயிற்சி அளிப்பதன் ஊடாக படைத்தரப்போடு ஒரு சுமுக மான நீண்ட எதிர்கால நலன் சார்ந்த உறவினை ஏற்படுத்திக்கொள்ளலாமா என்று இந்தியா பரீட்சித்துப் பார்க் கிறது.

வேற்று நாட்டு இராணுவத்திற்கு பயிற்சி அளிக்கும் வல்லரசுகள் இருதரப்பு நலன்களை வளர்த் தெடுப்பதற்கு இதனைப் பயன்படுத் துவதை காணக்கூடியதாக உள்ளது.

இவைதவிர இந்தியாவின் அதி வேக போர்க்கப்பல் ஒன்று திரு மலைத் துறைமுகத்தை வந்த டைந்துள்ள செய்தி இதனை மேலும் உறுதிப்படுத்துகிறது.

தமது மண்ணில் இலங்கைப் படையினருக்கு பயிற்சி அளிப்பதும் அவர்கள் மண்ணில் அவர்களோடு பரஸ்பர உறவினை ஏற்படுத்துவதும் இதன் ஒரு அங்கமாகும். ஆனாலும் இலங்கை அரசோடு படைத்தரப்பு உறவினைப் பலப்படுத்த மேற்கொள் ளும் முயற்சிக்கு தமிழகம் தடைக்கல் லாக இருப்பது இந்திய மத்திய அரசிற்கு விசனத்தை ஏற்படுத்துகிறது.

விடுதலைப் புலிகளின் மீதான தடை நீடிப்பு ஊடாக தமிழகத்தின் எதிர்ப்புக்குரலை அடக்க தேசிய ஒரு மைப்பாடு இறைமை என்கின்ற அஸ்திரங்களைப் பிரயோகிக்க இந்தியா முற்படுவதை அதன் நலன் சார்ந்து புரிந்து கொள்ளலாம்.

இந்தியாவைப் பொறுத்தவரை அதன் பிராந்திய மூலோபாய நலன் முழு இலங்கையையும் சார்ந்து இருக்கிறது. இலங்கையின் ஒருமைப் பாட்டிற்கு குந்தகம் ஏற்படாத வகையில் தேசிய இன முரண் பாட்டிற்கான தீர்வு எட்டப்பட வேண் டும் என்கின்ற இந்தியாவின் பார்வை இதன் அடிப்படையில் இருந்து கட்டமைக்கப்படுவதைக் காணலாம்.

அதேவேளை வடகிழக்கில் சிங்கள த்தால் மேற்கொள்ளப்படும் நில அபகரிப்பு குறித்து பேசுவதை இந்தியா தவிர்ப்பது ஆச்சரியமான விடயமல்ல. இருப்பினும் இரு நாடுகளுக்கிடையிலான உறவுகள் அண்மைக்காகலமாக பலவீனம டைவதை இந்திய உயர் அதிகாரிகளின் இலங்கைப் பயணங்கள் மறைமுகமாக சுட்டிக்காட்டுவதை நோக்கவேண்டும். இருதரப்பு உறவுநிலை முறிவுநிலை யினை எட்டாதவாறு பார்த்துக் கொள்வதற்கு இப்பயணங்கள் மேற் கொள்ளப்பட்டாலும் தெற்காசியாவில் விரிவடையும் சீன ஆதிக்கம் குறித்து இந்தியா கவலையடைவதை நேபாளம் மற்றும் பூட்டான் தூதுவர்களை இந்திய தேசியப் பாதுகாப்பு ஆலோச கர் சிவ்சங்கர் மேனன் அழைத்து கலந்துரையாடியது புலப்படுத்துகிறது.

நேபாளத்தில் 36 மாலைதீவில் 08 இலங்கையில் 12 பங்களாதேஸில் 09 என்கின்ற வகையில் பாரிய முதலீட் டுத்திட்டங்களை மேற்கொள்ளும் உலகின் இரண்டாவது பெரிய பொரு ளாதார வல்லரசாகத் திகழும் சீனாவின் ஆதிக்கத்தை, எதிர்கொள்ள சில அவசர நகர்வுகளை இந்தியா மேற் கொள்ள முயற்சிக்கிறது.

இந்நிலையில் 1985இல் ஆரம்பிக் கப்பட்ட தமிழீழ ஆதரவு அமைப் பினை மறுபடியும் தூசி தட்டி கையில் எடுத்துள்ளார் தி.மு.க. தலைவர் கருணாநிதி.

இந்திய மத்திய அரசின் ஆட்சி அதிகாரத்தில் பங்கு வகிக்கும் கருணாநிதி இலங்கை- இந்திய இராஜதந்திர உறவில் சிக்கல் ஏற்பட் டுள்ள இத்தருணத்தில் டெசோவை ஏன் தூக்கிப்பிடிக்கின்றார் என்கின்ற கேள்வி எழுகிறது.

இவரின், ஈழத்தமிழர்களின்பால் கொண்ட பெருவிருப்பினை முள்ளி வாய்க்கால் இன அழிப்பின்போது நாம் கண்டுகொண்டோம்.

அப்போது டெசோ அமைப்பு கோமா நிலையில் இருந்தது. போர் நிறுத்தப்பட்டுவிட்டது என்று பொய் யுரைத்த கருணாநிதி இலட்சக் கணக்கான மக்கள் கொல்லப்படுவதை தமிழக மக்களுக்கு மூடிமறைத்தார் என்கின்ற குற்றச்சாட்டு பரவலாக இருந்தது.

இந்திய மத்திய அரசின் பிராந்திய நலனிற்கு துணைபோகவேண்டிய அவசியத்தால் சொந்த இனம் அழிக்கப்படுவதை அவர் அனுமதி த்தார் என்பதுதான் உலகத் தமிழினத் தின் கருத்து. இப்போதும் அதே பிரச்சினைதான் அவருக்கு.

கடந்த சட்டமன்ற தேர்தலில் சந்தித்த படுதோல்வி, இடைத் தேர்தல்களில் கூட்டுச்சேராமல் தனித்து நின்று வெற்றிவாகை சூடும் ஜெயல லிதா அம்மையாரின் ஆளுமை, காங்கிரஸை தமிழகத்தில் செல்லாக் காசாக்கிய சீமானின் திடீர் எழுச்சி என்பன நிரந்தரமான அரசியல் சரிவினை தி.மு.க. விற்கு ஏற்படுத்தி விடுமோ என்கின்ற அச்சத்தினால், ஈழப்பிரச்சினையை டெசோ ஊடாகத் தூக்கிப்பிடித்து சரியும் செல்வாக்கை நிமிர்த்த முனைகிறார் கருணாநிதி.


அதேவேளை காங்கிரசுக்கும் இன்றைய தேவைப்படுகிறது. திமுக தனது மக்கள் செல்வாக் கினை அதிகரித்தால் மட்டுமே அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் அதனோடு கூட்டுச்சேர்ந்து சில ஆசனங்களையாவது பெறலாம் என்று காங்கிரஸ் கணக்குப் போடு கிறது. அத்தோடு இந்த டெசோ மாநாட்டினூடக, விலகிச்செல்லும் இலங்கை அரசுக்கு அச்சுறுத்தும் செய்தியொன்றினை கொடுக்கலாம் என்றும் மத்தியரசு திட்டமிடுகிறது.

ஆனால், இம்மாநாட்டில் தமிழீ ழம்தான் ஒரே தீர்வு என்கின்ற தீர்மா னத்தை நிறைவேற்றி தனது எதிரி களின் (சீனா,பாகிஸ்தான்) காலடி யில் ஒரேயடியாக இலங்கை அரசு வீழ்ந்துவிட வழியேற்பட்டுவிடக் கூடாது என்கின்ற எச்சரிக்கை உணர்வும் இந்திய மத்திய அரசிற்கு இருக்கின்றது.

இதனை மத்திய அமைச்சர் பா.சிதம்பரத்தின் வேண்டுகோள் மேலும் உறுதிப்படுத்துகிறது. இதனை யடுத்து இரணங்களை ஆற்றுவதும் பசியைப்போக்குவதும் வாழ்வா தரங்களை வளப்படுத்துவதமே இன்றைய தேவை எனக்கூறும் கருணாநிதி ஒரு அரசசார்பற்ற தொண்டு நிறுவனம் போல் பேச ஆரம்பித்துள்ளார். அத்தோடு தனி ஈழத்திற்கான போராட்டம் கிளர்ச்சி எதுவும் இல்லையென்றும் தெளி வாகச் செ்ால்கிறார். டெசோ மாநா ட்டின் மூலம் பிறப்புரிமைக் கோட் பாட்டில் உறுதியாக இருக்கும் ஈழத் தமிழ் மக்களுக்கு எதுவித பலனும் இல்லையென்பதே உண்மை.

சரிந்துவரும் மக்கள் ஆதரவினை மீளப்பெறுவதற்கு ஈழமக்களின் வாழ்வுரிமைப் போராட்டத்தை மறுபடியும் தனது கரங்களில் எடுத்து ள்ளார் கருணாநிதி. டெசோ வரவேற் புக்குழுவில் இருக்கும் இராதா கிருஷ்ணன் என்பவர் புலம்பெயர் அமைப்புக்களையும் தனி நபர் களையும் ஈழஆதரவு ஊடகங்களை யும் அணுகிக் கொண்டி ருக்கிறார்.

கருணாநிதியின் பொறிக்குள் சிக்கி தமிழகத்தில் நிரந்தரமாக இருக்கம் ஆதரவுச் சக்திகளை நாம் இழக்கக்கூடாது. குருதியில் உறைந்த தேசத்திற்கு புதிய படிப்பினைகள் தேவையில்லை.



**சரிந்துவரும் மக்களின்ஆதரவினை மீளப் பெறுவதற்கு ஈழமக்களின் வாழ்வுரிமைப் போராட்டத்தை மறுபடியும் தனது கரங்களில் எடுத்துள்ளார் கருணாநிதி**



நன்றி: இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிந்துரைகள் நடைமுறை என்பது வெறும் கண்துடைப்பு வித்தையே!

## சுரேஷ் எம்.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

**நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான பொறிமுறையைக் கொண்ட அரசாங்கத்தின் தேசிய செயற்றிட்டம் ஒரு கண்துடைப்பு நாடகமாகும். இதனால் எந்தவித பயனும் ஏற்படப்போவதில்லை என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.**

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதாக கூறும் அரசாங்கம் மறுபுறம் சிங்கள குடியேற்றங்களையும் காணி அபகரிப்பு நடவடிக்கைகளையும் இராணுவ மயமாக்கும் செயற்றிட்டங்களையும் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இந்நிலையில் அரசாங்கத்தின் தேசிய செயற்றிட்டம் என்பது நகைப்புக்கிடமானது. நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்தவதற்கான பொறிமுறையைக் கொண்ட தேசிய செயற்றிட்டத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும் அதன்படி 6 மாதங்கள், 12 மாதங்கள் மற்றும் 24 மாதங்கள் என்ற அடிப்படையில் அரச நிறுவனங்களினூடாக பரிந்துரைகள் அமுல்படுத்தப்படுமென்றும் காணிப்பிரச்சினைகளை தீர்க்க விசேட காணி ஆணைக்குழு நிறுவப்படுமென்றும் ஜனாதிபதியின் செயலாளரும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஆராய்வதற்கான குழுவின் தலைவருமான லலித் வீரதுங்க அண்மையில் வெளிவிவகார அமைச்சில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டின் போதே இதனை அவர் குறிப்பிட்டிருந்தார்.

இதேபோன்று அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவும் நல்லிணக்க ஆணைக்குழுவின் 285 பரிந்துரைகளில் 60 வீதமானவை அமுல்படுத்தப்பட்டு வருவதாக கூறியிருந்தார்.

இவ்விடயங்கள் குறித்து கேட்டபோதே சுரேஷ் பிரமேச்சந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தின் நல்லிணக்க ஆணைக்குழு என்பது வெறும் ஏமாற்று வித்தையாகும். இது காலத்தை கடத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையேயன்றி இதனால் எதுவித பயனும் ஏற்படப்போவதில்லை. இந்த ஆணைக்குழுவின் பரிந்துரைகளினால் சாதிப்பதற்கு எதுவுமில்லை.


நல்லிணக்க ஆணைக்குழு 285 பரிந்துரைகளை மேற்கொண்டதன் பின்னர் வடக்கு, கிழக்கில் இராணுவ ஆக்கிரமிப்பு இடம்பெறுகின்றது. அங்கு மக்களின் நிலங்கள் சூறையாடப்படுகின்றன. சிங்கள குடியேற்றங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. பௌத்த விகாரைகள் அங்கு அமைக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளால் எதனை சாதிக்க முடியும்.

ஒருபுறம் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதாக கூறி உலகத்தை ஏமாற்றும் அரசாங்கம் மறுபுறத்தில் அதற்கு எதிர்மாறான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் அமுலாக்கலினால் வடக்கு, கிழக்கில் இடம்பெற்று வரும் இராணுவ ஆக்கிரமிப்பு, காணி சுவீகரிப்பு, பௌத்த விகாரைகள் அமைக்கும் நடவடிக்கை, சிங்கள குடியேற்றங்களை தடுத்து நிறுத்த முடியுமா? இந்த பரிந்துரை நடைமுறை என்பது வெறும் கண்துடைப்பு நடவடிக்கையாகும்.

சர்வதேசத்தை ஏமாற்றுவதற்காக அரசாங்கம் இத்தகைய நாடகத்தை ஆடி வருகின்றது. உண்மையில் நல்லிணக்க ஆணைக்குழுவினாலோ அல்லது ஆணைக்குழுவின் பரிந்துரைகளினாலோ தமிழ் மக்களுக்கு எந்தவித நன்மையும் ஏற்படப்போவதில்லை.

(அ-2)



அரசியல் கைதிகளின் விடுதலையை கோரும் பகிரங்க மனுவுக்கான கையெழுத்து சேகரிக்கும் நடவடிக்கை கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்னால் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டது. இதன் போது த.தே.கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரமேச்சந்திரன் கையெழுத்திடுவதை படத்தில் காணலாம்.

# மாணவர்களுக்கு அநீதி ஏற்பட ஜனாதிபதி இடமளிக்கமாட்டார்

## அமைச்சர் டலஸ் நம்பிக்கை

(கொழும்பு)



இசட் புள்ளி சர்ச்சையினால் மாணவர்களுக்கு அநீதி ஏற்பட ஜனாதிபதி இடமளிக்க மாட்டார் என இளைஞர் விவகார அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இசட் புள்ளி பிழையாகக் கணிப்பீடு செய்யப்பட்டுள்ளதாக சிலர் நீதிமன்றம் சென்றனர். நீதிமன்றம் இசட் புள்ளி கணிப்பீட்டை மறுபரிசீலணை செய்யுமாறு உத்தரவிட்டது.

, இதன்படி புதிய இசட் புள்ளி பெறுபேறுகள் அறிவிக்கப்பட்டன. இசட் புள்ளி பெறுபேறுகள் பிழையானவை எனத் தெரிவித்த அதே தரப்பினர் தற்போது மாணவர்களின் கல்வி சீர்குலைக்கப்பட்டுள்ளதாக அரசாங்கத்தின் மீது குற்றம் சுமத்துகின்றனர்.

இசட் புள்ளி கணிப்பீட்டின் மூலம் எந்தவொரு மாணவனுக்கோ மாணவிக்கோ அநீதி இழைக்கப்படமாட்டாது. குறுகிய நோக்கில் அரசியலில் ஈடுபடும் தரப்பினர் பிரச்சினைகளை ஏற்படுத்த முயற்சிக்கின்ற போதிலும் இந்த முயற்சி வெற்றியளிக்காது என்றார். (அ-2)

# கிழக்கு மாகாண தேர்தல் நல்லிணக்க முனைப்புக்களை சீர்குலைக்கும்

## அமைச்சர் டியூ தெரிவிப்பு

(கொழும்பு)

கிழக்கில் நடத்தப்படவுள்ள தேர்தல் தேசிய நல்லிணக்க முனைப்புகளை சீர்குலைக்கும் என சிரேஷ்ட அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிழக்கின் கள நிலைமைகளை அறிந்து கொண்டு அரசாங்கம் தீர்மானம் எடுத்திருக்க வேண்டும். கடந்த 2008 ஆம் ஆண்டு கிழக்கில் நடைபெற்ற மாகாணசபைத் தேர்தல்களிலும் இம்முறைத் தேர்தல்களிலும் இடதுசாரி கட்சிகளுக்கு ஆளும்கட்சி சந்தர்ப்பம் வழங்க வில்லை.

பிரிவினைவாதத்தை தூண்டும் வகையிலான எந்தவொரு நகர்வும் ஆரோக்கியமானதாக கருத முடியாது.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு உள்ளிட்ட அரசியல் கட்சிகள் அனைத்துமே கிழக்கில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலைமைகளுக்கு பொறுப்பு சொல்ல வேண்டும்.

ஆளும் கட்சியின் தேர்தல் பிரசார உத்திகள் பிரிவினைவாத சக்திகளை வலுப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. மேலும் உண்மையை கண்டறியும் ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு முரணான வகையில் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

எந்த காரணத்திற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேர்தலில் தனித்து போட்டியிடத் தீர்மானித்தது என்பதனை அரசாங்கம் ஆராய வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)


# கண்ணீர் அஞ்சலி



(சு-643)

திருமதி பேரம்பலம் மாணிக்கம்
(ESP)

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து கொள்வதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
நல்லூர்க்கோட்டம்.
சி.மாணிக்கராசா
கோட்டக்கல்விப்பணிப்பாளர்
நல்லூர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

174

## பீர்பால் கதைகள்

## தெய்வீக இசை



சக்கரவர்த்தி அக்பர் இசையின் மேல் மிகுந்த விருப்பமுள்ளவர். தான்சென் அவரது நவரத்தினங்களுள் ஒருவர். அவர் மிகச் சிறந்த இசைக் கலைஞராக விளங்கினார்.

ஒரு மாலை நேரத்தில் தான்சென்னின் இசையைக் கேட்டு விட்டு, அக்பர், பீர்பாலுடன் அரண்மனைத் தோட்டத்தில் உலவிக் கொண்டிருந்தார்.

பீர்பால்! தான்சென்னின் இசை எவ்வளவு நளினமாக உள்ளது. அவரை விடச் சிறந்த பாடகர் உலகில் எவருமில்லை! என்றார்.

ஆம்! தான்சென் ஒரு நல்ல பாடகர். ஆனால், அவரோ அவரது குரு ஸ்வாமி ஹரிதாசே உலகில் மிகச் சிறந்த பாடகர் என்றார். அவரது குருவின் பாடல்கள் எல்லா உயிர்களையும் தூண்டிடும் எனக் கூறினார்! என்றார் பீர்பால்.

அப்படியா? நான் இப்போதே தான்சென்னிடம் பேச வேண்டும் எனக் கூறி தான்சென்னை வரவழைத்தார் அக்பர்.

தான்சென், உமது குரு ஸ்வாமி ஹரிதாஸ் மிகவும் தெய்வீகமாகப் பாடுவார் எனக் கேள்விப்பட்டேன். அவர் உங்களை விடச் சிறந்த பாடகர் என மக்கள் கருதுகின்றனர். இது உண்மையா? எனக் கேட்டார் அக்பர்.

உண்மைதான் பாதுஷாவே! எனது குரு தெய்வீகமான பாடகர். தும்புருவின் மறுபிறவி. அவரை விடச் சிறப்பாக யாராலும் பாட இயலாது! என்றார் தான்சென்.

தங்களது குருவின் இசையை கேட்க நான் ஆசைப்படுகிறேன். அவரை எனது அரசவைக்கு அழைத்து வாருங்கள்! என அக்பர் கூறினார்.

பாதுஷாவே! எனது குரு பெரிய மகான். யாரும் அவரை உத்தரவிட முடியாது. அவரை தாங்கள் அழைத்தாலும் அவர் இங்கு வர மாட்டார்! என்று தான்சென் சொன்னார்.

அப்படியென்றால் மன்னர் எப்படி அவரைக் காண்பது? பீர்பால் கேட்டார்.

பாதுஷாவே! எனது குருவின் ஆசிரமம் `பிருந்தாவனத்தில் உள்ளது. நான் தங்களை அங்கு சென்று காணுமாறு வேண்டுகிறேன்! என்றார் தான்சென்.

உடனே அக்பர், ராஜா மான் சிங்கிடம் அவரது பயணத்திற்கான ஏற்பாடுகளை செய்யச் சொன்னார். இவற்றைப் பார்த்த தான்சென், பீர்பாலை தன் பக்கம் இழுத்தார்.

பீர்பால், எனது குரு மிகவும் எளிமையானவர். அதனால் அரசரை அவரது உதவியாளர்கள் இல்லாமல் பயணிக்கச் சொல்லுங்கள்! என்றார் தான்சென்.

பீர்பால் ஒப்புக் கொண்டு அக்பரிடம் சென்றார். பாதுஷாவே! தாங்கள் ஒரு புனித பயணம் செல்கிறீர்கள். அதற்குக் தங்களின் உதவியாளர்கள் இல்லாமல் பயணிப்பதே புத்திசாலித்தனம் அல்லவா? என்றார் பீர்பால்.

அக்பர் ஆமோதித்து ஒரு தேரில் பீர்பால் மற்றும் தான்சென்னை மட்டும் அழைத்துக் கொண்டு புறப்பட்டார்.

இங்கு தேரை நிறுத்திவிட்டு, இங்கிருந்து ஆசிரமத்திற்கு நடந்து செல்வோம்! என பீர்பால் பிருந்தாவனத்தை அடைந்ததும் கூறினார்.

நான் முன்னால் சென்று எனது குருவிடம் தங்கள் வருவதைத் தெரிவித்து விட்டு வருகிறேன்! எனச் சென்றார். சிறிது நேரம் சென்று திரும்பி வந்து தான்சென், அக்பரையும் பீர்பலையும் ஆசிரமத்திற்கு அழைத்துச் சென்றார்.

தான்சென்னின் குரு ஸ்வாமி ஹரிதாஸ் பார்பதற்கு நல்ல சான்றோர் போல நீளமான தாடியும் நரைத்த முடியுடனும் காணப்பட்டார். அவர் மன்னரை அன்புடன் வரவேற்றார்.

குருவே! பாதுஷா அவர்கள் தங்களது இசையைக் கேட்க ஆசைப்படுகிறார்! என்றார் தான்சென்.

உங்களுடைய ஆசை புரிகிறது பாதுஷாவே! ஆனால் என்னை யாராவது பாடுமாறு ஆணையிட்டால் நான் பாடமாட்டேன். என்னுள் உள்ள ஒரு வேகம் என்னைப் பாடத் தூண்டுகிறது! என்றார் குரு.

இதைக் கேட்ட அக்பர் ஏமாற்றமடைந்தார். அவர் ஆசிரமத்தை விட்டுப் புறப்பட்டார். அவருக்கு சற்று கோபமாகவும் இருந்தது. பீர்பாலுக்கு மன்னரின் உணர்ச்சி புரிந்தது.



தான்சென்! உமது குரு பாதுஷாவிற்காகப் பாடமாட்டார். அவரை எப்படியாவது உம்மால் பாடவைக்க முடியுமா? என்றார் பீர்பால்.

ம், அதற்கு ஒரு வழி உள்ளது. நான் தவறாகப் பாடினால் அவர் என்னை உடன் திருத்திடுவார்! என்றார் தான்சென்.

அப்படியானால் சென்று ஒரு தவறான ராகத்தைப் பாடுங்கள். அப்போது உங்கள் குரு உங்களைத் திருத்துவரார். நாங்கள் வெளியே இந்த ஜன்னலருகே நின்று கேட்கிறோம்! என்றார் பீர்பால்.

தான்சென் ஆசிரமம் சென்று ஒரு புகழ் பெற்ற பஜனைப் பாடலை பாட ஆரம்பித்தார்.

ஆனால் அவர் ஒரு தவறான ராகத்தில் பாடினார். இதைக் கேட்ட ஸ்வாமி ஹரிதாஸ், இல்லை இல்லை நீ இப்படிப் பாட வேண்டும்... எனக் கூறி பஜனையைப் பாட ஆரம்பித்தார்.

வெளியிலிருந்தவாறே அக்பரும் பீர்பாலும் குரு பாடுவதைக் கேட்டனர். அவரது இசை மிகவும் அற்புதமாக இருந்தது.

அவர்கள் ஆக்ரா திரும்புகையில், ஏன் உனது குருவைப் போல அற்புதமாக உன்னால் பாட முடியவில்லை தான்சென்? என அக்பர் கேட்டார்.

நான் எவ்வளவு முயற்சி செய்தும் என்னால் முடியவில்லை! என ஒப்புக் கொண்டார் தான்சென்.

ஏன்?... அக்பர் ஆவலாகக் கேட்டார்.

தான்சென், பீர்பாலை நோக்கினார். அவருக்கு மன்னரைப் புண் படுத்தாமல் எவ்வாறு பதிலளிப்பது எனத் தெரியவில்லை. அதனால் பீர்பால் பதிலளித்தார்.

பாதுஷாவே! தான்சென் பாடுவதும் அவரது குருவிற்கு சமமாகவே உள்ளது. ஆனால் தான்சென்னோ உங்களை மகிழ்விக்கப் பாடுகிறார்.

அவரது குருவோ தெய்வீகத்தை மகிழ்விக்கப் பாடுகிறார். அதனால் அவரது இசை தெய்வீகமானது! என பீர்பால் சாதுர்யமாகக் கூறினார்.

பீர்பாலின் அறிவுத்திறனை எண்ணி வியந்த அக்பர் அவரது விளக்கத்தைக் கேட்டுப் புகழ்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸார் தீவிர நடவடிக்கை; 109 குற்றவாளிகள் கைதாகினர்

## பாரிய குற்றச்செயல்கள் கிடப்பில்

யாழ். மாவட்டத்தில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கையின் போது கடந்த வாரம் மட்டும் 109 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு நீதிமன்றங்களில் ஆஜர்படுத்தப்பட்டுள்தாக யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரீகுகனேசன் தெரிவித்துள்ளார்.

அவரது அலுவலகத்தில் நேற்றுக்காலை 10 மணிக்கு நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,


இவற்றில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்களில் 61 பேரும் பொது இடங்களில் மதுபோதையில் இடையூறு ஏற்படுத்திய 40 பேரும் சூழல் மாசடைதலில் ஈடுபட்ட 18 பேரும் சட்டவிரோத மாட்டிறைச்சி விற்பனையில் ஈடுபட்ட 5 பேரும் கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட நால்வரும் சட்டவிரோத மண் விற்பனை மற்றும் மாடுகளைக் கடத்தி இறைச்சிக்காக விற்று வந்த தலா ஒவ்வொருவரும் கைது செய்யப்பட்டு அவ்வவ் பிரதேச நீதி மன்றங்களில் ஆஜர்படுத்தப்பட்டு உள்ளனர்.

இவற்றினைவிட களவுச் சம்பவங்களோடு தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் சிலர் கைது செய்யப்பட்டு உள்ளனர்.

நாம் பொதுமக்களின் பாதுகாப்பு தொடர்பாக தொடர்ந்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம் என அவர் மேலும் கூறினார்.

மேலும் நெல்லியடியில் போராட்டத்தின் போது பொலிஸாருக்கு முன்பாக புலிக்கொடி காட்டிய சம்பவம் , மாவட்ட நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரத்தின் வாசஸ்தலம் பருத்தித்துறையில் தாக்கப்டப்பட்ட சம்பவம், வைத்திய நிபுணர் ஜெயக்குமாரின் வீடு தாக்கப்பட்ட சம்பவம், ஊர்காவற்றுறையில் நடைபெற்ற கொலை, கோப்பாயில் நடைபெற்ற கொலை,மருத்துவ சங்கத் தலைவர் நிமலனுக்கு தொலைபேசியில் கொலை மிரட்டல், யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய செயலாளர் தர்ஷானந் தாக்கப்பட்டமை, ஆர்ப்பாட்டங்களின் போது நடைபெற்ற கழிவெண்ணெய் வீச்சு சம்பவங்கள், குடத்தனை மற்றும் நெல்லியடியில் த.தே. ம. முன்னணி உறுப்பினர்களின் வீடுகள் தாக்கப்பட்டமை ஆகிய பாரிய குற்றச்செயல்களில் ஈடுபட்ட எவரும் சந்தேகத்தின் பேரில் கூட கைது செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-4)

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையமானது பாரிய புனரமைப்பு பணிகள் மற்றும் நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக மூடப்பட்டுள்ளது. கடந்த 2 ஆம் திகதி மூடப்பட்ட இந் நிலையம் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி மீண்டும் திறக்கப்படவுள்ளது. சுத்திகரிப்பு நிலையம் புனரமைக்கப்படுவதை படத்தில் காணலாம்.



## புலிகள் தொடர்பான விசாரணைக்கு சுவிஸ்குழு இலங்கை வரும்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் செயற்பாடுகள் குறித்து விசாரணை செய்வதற்காக சுவிட்சர்லாந்தில் இருந்து 13 பேர் கொண்ட குழு ஒன்று இலங்கைக்கு வருகைதரவுள்ளது.

இலங்கை வரும் இந்தக்குழு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 3 ஆம் திகதி தொடக்கம் 12 ஆம் திகதி வரையில் இலங்கையில் தங்கி இருக்கும் என தெரிவிக்கப்படுகின்றது. இந்தக் காலப்பகுதியில் அவர்கள் இலங்கையில் வைத்து 26 பேரை விசாரணை செய்யவிருப்பதாக கூறப்படுகின்றது.

இதுவரையில் அவர்கள் சுவிட்சர்லாந்தில் 120 சாட்சியாளர்கள் மற்றும் தகவல் வழங்கியவர்களையும் விசாரணை செய்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)

# நல்லூர் கடமைக்கு மேலும் 150 பொலிஸார் ஈடுபடுத்தப்படுவர்

## பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தன் ஆலயத்திருவிழாக் காலத்தில் அதிகரிக்கும் திருட்டுக்களால் அங்கு பாதுகாப்பு கடமையாற்றும் பொலிஸாரின் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்கவுள்ளதாக யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்துள்ளார். தற்போது நல்லூர் ஆலய உற்சவத்தில் 600 பொலிஸார் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டு உள்ளதாகவும் அவ்வெண்ணிக்கையை மேலும் எதிர்வரும் 2 ஆம் திகதியிலிருந்து அதாவது 10 ஆம் நாளான மஞ்சத் திருவிழா முதல் 750 பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நல்லூர் ஆலய உற்சவத்தினை முன்னிட்டு அச்சூழலை வியாபாரிகளும் பக்தர்களும் முற்றுகையிட்டுள்ளதோடு திருடர்களும் தமது கைவரிசையை காட்டி வருகின்றனர்.

இதுவரை 20 பவுண் வரையான தங்க நகைகள் களவு போயுள்ளன. இதில் யாழ். பொலிஸாரின் நடவடிக்கையில் மட்டக்களப்பு, புத்தளம், சிலாபம் ஆகிய இடங்களைச் சேர்ந்த 3 இளம் பெண்கள், ஒரு கைக்குழந்தை உட்பட 7 பேர் கொண்ட திருட்டுக் கும்பல் ஒன்றை கைது செய்துள்ளதோடு இவர்களிடமிருந்து 14 பவுண் தங்க நகைகளும் மீட்கப்பட்டு உள்ளன.

இத்திருட்டுச் சம்பவங்கள் இனி வரும் நாட்களில் அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன. ஏனெனில் இனிவரும் நாட்களில் சனக்கூட்டம் அதிகமாக காணப்படும்.

நாம் வழங்கும் பாதுகாப்பை 100 வீதமாக உறுதிப்படுத்துவதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு பொலிஸாருக்கு அவசியமாகும்.

கோயிலுக்கு வரும் போது ஆபரணங்களை அணிந்து வர வேண்டாம் என நாம் வற்புறுத்தவில்லை. இயன்ற வரையில் அவைகளை குறைத்துக் கொள்ளுங்கள் அல்லது அணிந்து வந்தால் அதில் கண்ணும் கருத்துமாக இருங்கள்.

தற்போது பெண்களும் பக்தர் வேடமணிந்து திருட்டுக்களில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர். அதிகளவில் இவ்வாறு வெளியிடங்களைச் சேர்ந்த பெண்களே ஈடுபடுகின்றனர்.

இதனைவிட நீங்கள் கோவிலுக்கு வரும் போது வீட்டின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துங்கள். நீங்கள் கோவிலுக்கு சென்ற சமயம் பார்த்து வீடுகளிலும் திருட்டுக்கள் இடம்பெறலாம். நல்லூர் ஆலயச் சூழலில் யாராவது சந்தேகத்திற்கிடமாக வீட்டிலோ, விடுதி களிலோ வாடகைக்கு புதிதாக தங்கியிருந்தால் அவை தொடர்பாகவும் பொலிஸாருக்கு தெரியப்படுத்துங்கள் என்றார். (அ-4)

## பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையின் பொது நூலகத்தின் ஏற்பாட்டில் தரம்-05 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நல்லூர் பிரதேச சபை உப அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் து.துரைமணி தலைமையில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் சிறப்பு விருந்தினராக யா/ கல்வியங்காடு அ.த.க. பாடசாலை அதிபர் க.ரவிச்சந்திரன் கலந்து கொள்வார்.

வளவாளராக கோண்டாவில் குட்டிச் சுட்டி கல்வி நிலைய இயக்குநர் யூ. வதன் கலந்து கொள்வார் என நல்லூர் பொது நூலக சேவகர் ப.பத்மரூபன் அறிவித்துள்ளார். (அ-9)

## தாயே அன்னம்மா!

அன்னை மரியை ஈன்றெடுத்த அமலியே!
அன்னையர்க்கு வாய்த்த அருட் பெருந் செல்வமே!
என்னைப் பெற்ற தாயிலும் பெரியவளே!
உன்னை நாடும் உறவுகளைக் காருமம்மா!

தாயாய் எனைக்காக்கும் சந்தானத்தாயே!
சேயாய் சேர்த்தணைக்கும் செம்மலரே!
நாயாய் அலைகின்ற நம்மவர் மீது
நாளும் உன்னருளைப் பொழியுமம்மா!

இரதம் ஏறும் இராக்கிளியே!
பிறப்பில் புனிதையான மரியாளைக்
கரம் ஏந்தும் நல்லதாயே!
வரம் ஒன்று தந்திடுவாய்!

இன்று மானிப்பாய் புனித அன்னாளின் தேர்த்திருவிழா

சி.வசிகரன்


# கண்ணீர் அஞ்சலி

பிரபல வர்த்தகர் (E.S.P) இ.ச.பே. நாகரத்தினம் அவர்களின்
பாசமிகு தாயார்

## திருமதி பேரம்பலம் மாணிக்கம்

(சி-649)




அவர்கள் கடந்த 25.07.2012 அன்று மறைந்த செய்தி கேட்டு மிகுந்த துயர் அடைவதுடன் அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளர்கள்,
பணியாளர்கள்.
கதிர் வேளாண்
A9 , கரடிப்போக்குச் சந்தி
கிளிநொச்சி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்து பல்கலை. கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி
# கொழும்பு சம்பியன்-யாழ்ப்பாணம் நான்காம் இடம்





அழைக்கப்பட்ட அனைத்து பல்கலைக்கழகங்களுக்கிடையிலான கூடைப்பந்தாட்ட போட்டி அண்மையில் கொழும்பில் உள்ள மகரகம தேசிய இளைஞர் பேரவை நுகேகொட சென் ஜோசப் மகளிர் கல்லூரி, பொலிஸ் பாக் மைதானம் ஆகிய இடங்களில் நடைபெற்றன.

இப்போட்டியில் பங்கு பற்றிய யாழ்ப்பாண பல்கலைக்கழக கூடைப்பந்தாட்ட அணி முதல் சுற்றில் பேராதனை பல்கலைக்கழக கூடைப்பந்தாட்ட அணியுடன் மோதிக் கொண்டது. அப்போட்டியில் 54-35 என்ற புள்ளி அடிப்படையில் பேராதனை பல்கலைக்கழக கூடைப் பந்தாட்ட அணியை தோற்கடித்து 19 புள்ளிகளால் யாழ்ப்பாண பல்கலைக்கழக கூடைப்பந்தாட்ட அணி வெற்றி பெற்று கால் இறுதிக்கு தகுதி பெற்றது.

கால் இறுதிப் போட்டியில் யாழ்ப்பாண பல்கலைக்கழக கூடைப்பந்தாட்ட அணியும் சப்ரகமுவ பல்கலைக்கழக கூடைப்பந்தாட்ட அணியும் மோதிக் கொண்டது. அப்போட்டியில் 51-45 என்ற புள்ளி அடிப்படையில் சப்ரகமுவ பல்கலைக்கழக கூடைப்பந்தாட்ட அணியை தோற்கடித்து 6 புள்ளிகளால் யாழ்ப்பாண பல்கலைக்கழக கூடைப்பந்தாட்ட அணி வெற்றி பெற்று அரை இறுதிக்கு தகுதி பெற்றது.

அரை இறுதிப் போட்டியில் களனி பல்கலைக்கழக கூடைப்பந்தாட்ட அணியும் யாழ்ப்பாண பல்கலைக்கழக கூடைப்பந்தாட்ட அணியும் மோதிக் கொண்டன. அப்போட்டியில் 66-76 என்ற புள்ளி அடிப்படையில் 10 புள்ளிகளால் யாழப்பாண பல்கலைக் கழக கூடைப்பந்தாட்ட அணி தோல்வி அடைந்தது.

மூன்றாம் இடத்தினை தேர்வு செய்யும் கூடைப்பந்தாட்ட போட்டியில் கிழக்கு பல்கலைக்கழக உதைபந்தாட்ட அணியுடன் யாழ்ப்பாண பல்கலைக்கழக அணி மோதிக் கொண்டது. இப் போட்டியில் 79-76 என்ற புள்ளி அடிப்படையில் 3 புள்ளிகளால் யாழ்ப்பாண பல்கலைக்கழக அணி தோல்வியுற்று நான்காம் இடத்தினை பெற்றுக் கொண்டது.

இறுதிப் போட்டிக்கு கொழும்பு பல்கலைக்கழக அணியும் களனி பல்கலை. அணியும் தெரிவு செய்யப் பட்டன.

அப்போட்டியில் 51-50 என்ற புள்ளி அடிப்படையில் ஒரு புள்ளியால் களனி பல்கலைக்கழக கூடைப்பந்தாட்ட அணியை தோற்கடித்து கொழும்பு பல்கலைக்கழக அணி சம்பியன் பட்டம் வென்றது.


பல வருடங்களுக்குப் பின் யாழ்ப்பாண பல்கலைக்கழக கூடைப்பந்தாட்ட அணி அரை இறுதிப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



வடமாகாண விளையாட்டு விழா மலர் வெளியீட்டு அனுசரணைக்கான காசோலையினை சுன்னாகம் இலங்கை வங்கி முகாமையாளர் பொ.பாலகுமார் வடமாகாண விளையாட்டுத் திணைக்கள பணிப்பாளர் எஸ். அண்ணாதுரை அவர்களிடம் கையளிப்பதையும் இலங்கை வங்கியின் உதவி முகாமையாளர், விளையாட்டுத்திணைக்கள நிகழ்ச் சித்திட்ட உதவியாளர் சி.வித்தியாதரன் ஆகியோர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.




# மாகாண மட்ட தடகளப் போட்டியில் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மாணவர்களின் சாதனை




வடமாகாண தடகளப் போட்டியில் 15 வயதிற்குட்பட்டோர் பிரிவில் நாதன் சுமன் 100,200 மீற்றர் ஓட்டப்போட்டியில் முதலாம் இடத்தை பெற்றுள்ளார்.



வடமாகாண தடகளப் போட்டியில் 15 வயதிற்குட்பட்டோர் பிரிவில் செல்வி றேமியா சுதாகரன் தட்டெறிதல் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.



வடமாகாண தடகளப் போட்டியில் 17 வயதிற்குட்பட்டோர் பிரிவில் பாஸ்கரன் சாலுஜன் 400 மீற்றர் தடை தாண்டல் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.



வடமாகாண பளுதூக்கல் போட்டியில் 20 வயதிற்குட்பட்டோர் பிரிவில் கருணாதரன் கஜந்தன் 115 கிலோ.கிராம் எடை தூக்கி இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானமும் நன்றே, பூமியும் நன்றே. ஆனால் அவற்றின் இடையே உள்ள அந்த ஒன்று தான் கெட்டது. ~ஸ்பானியப் பழமொழி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## மற்றவர்களின் வாழ்வுக்கு மதிப்பளிக்கப் பழகுங்கள்

மீளக் குடியமர்தல் என்ற விவகாரம் நடந்து கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் மீளக் குடியமர்வில் அரச அமைப்புகள், பொது நிறுவனங்கள் செய்யவேண்டிய கடமைகளுக்கு அப்பால் காணிச் சொந்தக்காரர்களின் கடமை குறித்தும் சிந்திக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளதை எவரும் மறந்துவிடக்கூடாது.

அதாவது இராணுவ நடவடிக்கையில் இடம் பெயர்ந்து இருபது, முப்பது ஆண்டுகளுக்குப் பின்னர் தங்கள் சொந்த மண்ணில் மீளக் குடியமர்வதற்காக செல்லுகின்றவர்களின் எண்ணிக்கை இடம் பெயர்ந்த எண்ணிக்கையோடு ஒப்பிடுமிடத்து குறைவென்றே கூறவேண்டும்.

இடப்பெயர்வில் இருபது ஆண்டுகள் என்ற நீண்ட இடைவெளியில், தாம் இடம்பெயர்ந்திருந்த இடங்களில் நிரந்தரமாக தங்கிக் கொள்ளுதல் அல்லது உள்நாட்டின் வேறு இடங்களில் வெளிநாடுகளில் தங்களுக்கான இருப்பிடத்தை தெரிவு செய்தவர்கள் மீளக் குடியமர்வு என்பதற்குள் உள்ளடங்கப்படமாட்டார்கள்.

எனவே இத்தகையவர்களின் காணிகளில் வளர்ந்துள்ள பற்றைகள் - புதர்கள் துப்புரவு செய்யப்படமாட்டாது என்பது தெரிந்த விடயம்.

ஒருபகுதி மக்கள் தங்கள் வாழ்விடத்தில் மீளக்குடியமரும்போது அருகிலுள்ள காணி நிலங்கள், பற்றைகளாகவும் பாம்புகள் வாழக் கூடிய புதர்களாகவும் இருக்கும் போது மீளக் குடியமரும் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து எவரும் சிந்திக்காமல் இருக்க முடியாது.

எனவே தங்கள் மண்ணில் மீளக்குடியமரும் மக்கள் தங்கள் இருப்பிடத்தில் நிம்மதியாக வாழக் கூடிய சூழலை ஏற்படுத்தவேண்டுமாக இருந்தால், உரிய காணிச் சொந்தக்காரர்கள் தங்கள் காணிகளை துப்புரவு செய்யவேண்டும்.

இதில் வெளிநாட்டில் அல்லது உள்நாட்டில் வேறு இடங்களில் இருப்பவர்களும் தங்கள் காணிகளை துப்புரவு செய்து மீளக் குடியமரும் மக்களின் வாழ்விற்கு உதவ வேண்டும்.

நாங்கள் இருக்கப் போவதில்லை. ஆகையால் எங்கள் காணிகளை துப்புரவு செய்ய வேண்டாம் என்று யாராவது அடம்பிடித்தால், அது பிறந்து வாழ்ந்த மண்ணுக்குச் செய்யும் மாபாவமாகும். எனவே ஒவ்வொரு காணிச் சொந்தக்காரர்களும் அவர்கள் உள்நாட்டில் இருந்தாலும் சரி வெளிநாட்டில் நிரந்தரமாக வாழ்ந்தாலும் சரி தத்தம் காணிகளை தூய்மைப்படுத்தி எல்லையிட்டு வேலி அடைத்து ஒரு ஒழுங்கு முறைக்குள் கொண்டுவரவேண்டும்.

அப்போதுதான் மீளக்குடியமர்ந்த ஊர்கள் தங்கள் பழைய சிறப்பைப் பெற்றுக் கொள்ளும்.

# ஜனாதிபதி மஹிந்தவுக்காக லண்டனில் காத்திருந்த ஈழத் தமிழர்கள்

லண்டன் ஒலிம்பிக்போட்டிகளின் தொடக்க நாளான நேற்று முன்தினம் ஒலிம்பிக் விளையாட்டரங்குகள் அமைந்திருக்கும் கிழக்கு லண்டன் பகுதியில் மூன்று இடங்களில் நடைபெற்ற கவனயீர்ப்பு நிகழ்வுகளில் பெருமளவிலான தமிழ் மக்கள் பங்கேற்றனர்.

ஆரம்ப நாள் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட நாட்டுத் தலைவர்கள், பிரமுகர்கள் சென்ற பாதையான அஸ்பின்வே என்ற பிரதான வீதியின் ஒருமருங்கில் மாலை 5 மணியளவில் கூடத் தொடங்கிய மக்கள் பதாகைகளையும் தமிழீழ தேசியக் கொடிகளையும் தாங்கியவாறு கோஷங்களை எழுப்பியபடி இரவு 8.30 மணிவரை தமது போராட்டத்தை தொடர்ந்தனர்.

பிறிதொரு தொகுதி மக்கள் அன்றைய நிகழ்ச்சி நடைபெற்ற உள்ளரங்குக்கு வெளியே கூடியிருந்து இனப்படுகொலை புரியும் இலங்கை தேசிய விளையாட்டு வீரர்கள் போட்டிகளில் கலந்து கொள்ள அனுமதித்தமைக்கு தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தினர். இவ்விடயத்தில் கூடுவதற்கு குறைந்தளவு மக்களுக்கே லண்டன் மாநகர பொலிஸார் அனுமதி வழங்கியிருந்தனர்.

அன்றைய போராட்டங்கள் ஒலிம்பிக் போட்டிகளை காண வந்திருந்த பன்னாட்டவர்களின் கவனத்தை ஈர்த்திருந்ததாக குறிப் பிடப்படுகின்றது.

ஆரம்பநாள் நிகழ்ச்சியில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் கலந்து கொள்வார் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அவர் லண்டனுக்கு வரவில்லை எனத் தெரியவருகின்றது.

தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட இன்றைய ஆர்ப்பாட்ட நிகழ்வுகளில் பிரித்தானியாவில் செயற்படும் அனைத்துத் தமிழ் அமைப்புக்களைச் சேர்ந்தவர்களும் பங்கேற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## அரச வைத்தியசாலைக்கு நோயாளர் காவு வண்டிகள்

நாடு முழுவதிலுமுள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் நிலவும் நோயாளர் காவு வண்டிகளின் தட்டுப்பாட்டை நீக்குவதற்காக மேலும் 250 நோயாளர் காவு வண்டிகளை கொள்வனவு செய்வதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

ஒரு நோயாளர் காவு வண்டியேனும் அல்லாத வைத்தியசாலைகளுக்கும் தட்டுப்பாடு நிலவும் வைத்தியசாலைகளுக்கும் இந்த வாகனங்கள் கையளிக்கப்படும் என சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

திறைசேரியின் 150 ஆவது சுற்றறிக்கைக்கிணங்க இந்த நோயாளர் காவு வண்டி கொள்வனவு செய்யப்படவிருப்பதாக சுகாதார அமைச்சு தெரிவிக்கின்றது. (அ-2)


## அல்காவின் ஆனந்த ராகங்கள் மாபெரும் இசை நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் முதன்முறையாக உலகத் தமிழர்களை தன் செல்லக் குரலால் வியக்கவைத்த விஜய் ரீவி ஜூனியர் சுப்பர் சிங்கர் புகழ் பாடகி அல்கா அஜித்துடன் மற்றும் பல முன்னணிக் கலைஞர்கள் கலந்து கொள்ளும் அல்காவின் ஆனந்தராகங்கள் இசை நிகழ்ச்சி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்திலும் நடைபெறவுள்ளது. (அ-9)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

### தேறித் தேறித் தெளிவதுந் தன்னையே



சிவத்தை நோக்கித் தெளிவதுந் தன்னையே
பவத்தை நீக்கிப் பணிவதுந் தன்னையே
தவத்தை யாற்றி யறிவதுந் தன்னையே
உவத்தல் காய்த லொழிப்பதுந் தன்னையே
வாதம் பேசி மதிப்பதுந் தன்னையே
காத மோடியுங் காண்பதுந் தன்னையே
பூத மைந்தனுட் போற்றலுந் தன்னையே
நாதம் விந்தென நவில்வதுந் தன்னையே
ஓடி யோடி உவப்பதுந் தன்னையே
தேடித் தேடித் தெளிவதுந் தன்னையே
நாடி நாடி நகைப்பதுந் தன்னையே
கூடிக் கூடிக் குறிப்பதுந் தன்னையே

# பகிர்வின் புதுமையை பாரெங்கும் பகிர்வோம்


## பரமபிதா காட்டிய பாதை

ஆயிரக்கணக்கான மக்களுக்கு அற்புதமான விதத்தில் இயேசு உணவளித்தார் என்னும் அருஞ்செயல் யோவான் உட்பட நான்கு நற்செய்தியாளர்களாலும் தவறாமல் தமது புத்தகங்களில் தருகின்றனர். அப்பங்களைப் பலுகச் செய்த புதுமையை இன்று நற்செய்தியாக யோவான் நற்செய்தியிலிருந்து பார்க்கின்றோம். இந்தப் பாலைநிலத்தில் இத்தனை ஆயிரம் பேருக்கு எப்படி உணவளிப்பது என்று கவலையில், கலக்கத்தில் மூழ்கியிருந்த சீடர்களுக்கு இயேசு உணவளித்து கவலை, கலக்கம் தீர்க்கின்றார். ஐந்து அப்பம், இரண்டு மீன், இயேசுவின் ஆசீர். ஐந்தாயிரம் பேர் வயிறார உண்டனர். மீதியும் பன்னிரண்டு கூடைகளில் இருந்தது. இயேசு தனியொருவராய் உணவைப் பலுகச் செய்தது ஒரு புதுமைதான். நற்செய்தியின்படி இது ஒருபார்வை.

சில விவிலிய ஆராய்ச்சியாளர்கள் இன்னும் ஒரு பார்வையை முன் வைக்கின்றார்கள். யூதர்கள் அடிமை வாழ்வு வாழ்ந்ததால் உணவுக்கு அதிகம் கஷ்டப்பட்ட ஒரு மக்கள் இனம். எனவே, அவர்கள் வீட்டைவிட்டு வெளியேறும் போது தங்கள் பொதியில் கொஞ்சம் உணவு எடுத்துச்செல்வது வழக்கம். அன்றும் இயேசுவின் போதனைகளைக் கேட்க வந்திருந்த போது அவர்கள் உணவு கொண்டு வந்திருந்தார்கள். மாலை ஆனதும் பசி வயிற்றைக்கிள்ள ஆரம்பித்தது. உணவுப் பொட்டலங்களை யார் முதலில் பிரிப்பது? பிரித்தால் பகிர வேண்டுமே என்பது அவர்கள் ஏக்கம்.

இயேசுவின் போதனைகளில் பகிர்வைப் பற்றிப்பேசினார். ஆனால், எப்படி இத்தனை பேருக்கு பகிர முடியும்? இந்தக் கேள்விகளில் அவர்கள் மூழ்கி இருந்தார்கள். இயேசுவின் சீடர்களுக்கும் இதே சிந்தனைதான். யார் ஆரம்பிப்பது? அப்போதுதான் அந்தப்புதுமை நிகழ்ந்தது. ஒரு சிறுவன் தான் கொண்டு வந்திருந்த ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் இயேசுவிடம் கொடுத்தான். அங்கே ஆரம்பமானது ஒரு அற்புத விருந்து. ஒரு சிறுவன் ஆரம்பித்த பகிர்வு, ஒரு பெரிய விருந்தை ஆரம்பித்து வைத்தது. அந்த மகிழ்விலேயே அங்கு இருந்தவர்களுக்கு வயிறு நிறைந்திருக்க வேண்டும். எனவேதான் அவர்கள் உண்டது போக மீதி 12 கூடைகளில் நிறைத்ததாக யோவான் நற்செய்தி கூறுகிறது. இயேசு அன்று நிகழ்த்தியது ஒரு பகிர்வின் புதுமை.

நாம் வாழும் இன்றைய சூழலில் இந்தப்புதுமை அதிகம் தேவைப்படுகிறது. இத்தனை வளங்களும் நவீன வசதிகளும் நிறைந்த இன்றைய உலகில் இன்னும் ஆயிரமாயிரம் மக்கள் பசியிலும் பட்டினியிலும் மடிகின்றார்கள். இதில் என்ன கொடுமை என்றால் பெரும்பாலானோர் குழந்தைகள். இந்த மரணங்கள் தேவையற்றவை. இந்தத் தேவையற்ற மரணங்கள் நிறுத்தப்பட வேண்டுமானால் இயேசு அன்று ஆற்றிய பகிர்வுப் புதுமை மீண்டும் உலகமெலாம் நடக்கவேண்டும். இயேசு இன்று நம்மிடையே வந்தால் உணவை இன்னும் பலுகச் செய்வதைவிட இருக்கும் உணவை பகர்ந்துகொள்ளும் புதுமையைச் செய்வார். தனியொருவனுக்கு உணவு இல் லையெனில் உலகத்தை அழிப்போம் என்று கோபத்தில் அன்று சொன்னார் பாரதி. உலகத்தை அழிப்பது எளிது. உலகத்தை வாழ வைக்க, வளப்படுத்த, பகிர்ந்துண்ணும் மனதை நமக்குத்தரவேண்டும் என இறைமகனிடம் வேண்டுவோம். முன்னேற்றத்தின் பெயரால் உலகத்தையும் இயற்கையையும் அழிப்பதை நிறுத்தி விட்டு உலகை வளப்படுத்தும் அறிவை, மனதை தர வேண்டும் என இறைவனிடம் வேண்டுவோம்.



பிரச்சினைகளுக்குத் தீர்வு பணத்தால் கிடைத்துவிடாது. அல்லது அறிவுத் திறமையால் சாதித்து விடுவதும் அல்ல. பல சந்தர்ப்பங்களில் நாம் இப்படித்தான் பணத்தை வைத்து தீர்க்கப் பார்க்கிறோம்.

பணத்தால் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முற்பட்டால் திருத்தூதர் பிலிப்பு சொன்னதுபோல் இருநூறு தெனாரியத்திற்கு அப்பம் வாங்கினாலும் ஆளுக்கு ஒரு துண்டும் கிடைக்காது. பணத்தை வைத்து செய்யும் முயற்சிகள் எல்லாம் பிரச்சினைகளுக்குத் தீர்வு தருவதல்ல. பிரச்சினைகளைப் பின்விளைவுகளோடு பெரிதாக்குபவை.

இங்கே ஒரு சிறுவன் இருக்கிறான். அவனிடம் 5 வார் கோதுமை அப்பங்களும் 2 மீன்களும் உள்ளன என அடையாளம் காட்டி அனைவரின் பங்களிப்புக்கும் அடித்தளமிடுகிறார். பசிப் பிரச்சினை பறந்தோடுகிறது. ஆகவே ஆன்மீகத்தை அனைத்துப் பிரச்சினையினுள்ளும் அனுமதிப்போம்.

பிரச்சினைகளுக்கு [illegible] காண்போம். இயேசுவோடு [illegible] வோம்.

ம.பிரான்சீஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## அமரர் திருமதி பேரம்பலம் மாணிக்கம் (E.S.P.)

### வாரிவளவு, காரைநகர்



காரைநகர் வாரிவளவைப் பிறப்பிடமாகவும், கொழும்பு பம்பலப்பிட்டியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பேரம்பலம் மாணிக்கம் அவர்கள் 25.07.2012 புதன்கிழமை அன்று சிவபதமடைந்தார். அன்னார் காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் இ.ச.பேரம்பலம் (E.S.பேரம்பலம் கம்பனி, 50, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும், முன்னாள் நாத்தாண்டியா வர்த்தகரும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-முத்துப்பிள்ளை தம்பதியினரின் அருமை மகளும் காலஞ்சென்ற சண்முகம்- பார்வதி தம்பதியினரின் மருமகளும், பராசக்தி, பரமேஸ்வரி, சௌந்தராம்பிகை, E.S.P. நாகரத்தினம், அன்னபாக்கியம், காலஞ்சென்ற பாலமணி, E.S.P.கணேசலிங்கம் ஆகியோரின் பாசமிகு தாயாரும், திருஞானசம்பந்தன், சதாசிவம், சோமசுந்தரம், சண்முகராசா, தங்கமலர், சுமதி ஆகியோரின் அன்பு மாமியாரும், சண்முகநாதன் (ஜேர்மனி), காலஞ்சென்ற சண்முகராஜன், சண்முகரத்தினி (அவுஸ்திரேலியா), ஞானேஸ்வரி (ஆசிரியை, முத்துத்தம்பி வித்தியாலயம், திருநெல்வேலி), சிவராசன் (கனடா), சிவரூபன் (லண்டன்), சிவகுமாரி (யாழ்ப்பாணம்), சிவகணேசன் (சிங்கப்பூர்), நந்தினி (கனடா), சாந்தகுமார் (அவுஸ்திரேலியா), சிவகுமார் (வவுனியா), கஜேந்திரன் (யாழ்ப்பாணம்), கஜமுகன் (கனடா), கமலநேசன் (அவுஸ்திரேலியா), கமலநாதன் (மொரட்டுவை பல்கலைக்கழகம்), கமல்ரூபன் (கொழும்பு பல்கலைக்கழகம்), ராஜசுலோஸினி (லண்டன்), கலைமகள் (கனடா), வாசுகி (யாழ்ப்பாணம்), அபிராமி (Holy Family Convent), செந்தூரன் (Colombo International School), வைஷிகா (Holy Family Convent) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், அனுஷன், ஆரணி, வானதி, ஆரதி, சுவாதி, நிவேதன், கவிதன், ஆரங்கன், ஆர்த்தி, சாருஷன், கஜந்தன் ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார். அன்னாரின் பூதவுடல் இல.11 பெதஸ்டா வீதி, கொழும்பு-05 இல் அமைந்துள்ள அவரது இல்லத்தில் 29.07.2012 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு இறுதிக் கிரியைகள் இடம்பெற்று 10 மணிக்குகொழும்பு பொரளை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

இல. 11, பெதஸ்டா வீதி, Off டிக்மன்ஸ் வீதி, கொழும்பு - 05
011 2503112, 077 [illegible]06323, 011 2542985, 077 8177817

**தகவல் :**
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

E.S.P. நாகரத்தினம்: E.S.P.Nagaratnam & Co, 52, 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
E.S.P.Nagaratnam & Co, கரடிப்போக்கு சந்தி, கிளிநொச்சி
Kajamugan Hardware, 147, 149, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
S.P.N. Motors, 145, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
கஜமுகன் ஹாட்வெயர், (ஸ்டோரிஸ்), 103, பழைய சோனகத் தெரு, கொழும்பு-12

E.S.P. கணேசலிங்கம்: E.S.P.Trading Company Private Ltd, ஜம்மா பள்ளிவாசல் ஒழுங்கை, யாழ்ப்பாணம்
E.S.P. அன் கம்பனி, 41, அப்துல் ஜவாரி மாவத்தை, கொழும்பு - 12
E.S.P. அன் கம்பனி, 124, பழைய சோனகத் தெரு, கொழும்பு - 12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையை சுருட்டியது இந்தியா




இலங்கை-இந்தியா அணிகளுக்கிடையில் நடைபெற்றுவரும் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளின் மூன்றாவது போட்டியில் இந்திய அணி 5 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

கொழும்பு ஆர்.பிரேமதாஸ விளையாட்டு மைதானத்தில் நேற்று நடைபெற்ற போட்டியிலேயே இந்திய அணி வெற்றிபெற்று 2:1 என்ற ரீதியில் தொடரில் முன்னிலை வகிக்கிறது.

நேற்று மதியம் இடம்பெற்ற நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களையிழந்து 286 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

துடுப்பாட்டத்தில் குமார் சங்கக்கார 73 ஓட்டங்களை அதிகபட்சமாக பெற்றார். இறுதியாக ஜோடி சேர்ந்த அஞ்சலோ மத்தியூஸ் ஆட்டமிழக்காமல் 57 பந்துகளை எதிர்கொண்டு 71 ஓட்டங்களையும் ஜீவன் மெண்டிஸ் ஆட்டமிழக்காமல் 45 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.



இந்திய அணியின் பந்துவீச்சில் சகீர்கான் 10 ஓவர்கள் பந்துவீசி 39 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

287 என்ற வெற்றியிலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 49.4 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து வெற்றியிலக்கை அடைந்தது.


துடுப்பாட்டத்தில் கௌத்தம் காம்பீர் 102 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். இறுதியாக ஜோடி சேர்ந்த சுரேஷ் ரெய்னா அபாரமாக துடுப்பெடுத்தாடி 45 பந்துகளில் 65 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றுக்கொடுத்தார்.

அவரோடு இணைந்தாடிய இர்பான் பதான் ஆட்டமிழக்காமல் 34 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

இலங்கை அணியின் பந்துவீச்சு சார்பில் லசித் மலிங்க 10 ஓவர்கள் பந்துவீசி 60 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியிருந்தார்.

இப் போட்டியின் ஆட்டநாயகனாக இந்திய அணியின் சுரேஷ் ரெய்னா தெரிவு செய்யப்பட்டார்.

## லண்டன் ஒலிம்பிக் முதல் தங்கம் சீனாவுக்கு



லண்டன் ஒலிம்பிக் போட்டியில் முதல் தங்கத்தை சீன வீராங்கனையான யி சில்லிங் துப்பாக்கிச் சுடுதலில் தட்டிச்சென்றார்.

ஒலிம்பிக் போட்டியின் இரண்டாவது நாளான நேற்று துப்பாக்கிச் சுடுதலில் பெண்களுக்கான 10 மீற்றர் ஏர் ரைபிள் போட்டி நடைபெற்றது.

தகுதிச்சுற்றில் போலாந்து (399), சீனா (399), ரஷ்யா (398), சீனா (398), ஈரான் (397), அமெரிக்கா (397 புள்ளிகள்) (6,7), செக்குடியரசு (397) நாட்டு வீராங்கனைகள் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றனர்.

இறுதிப் போட்டியில் சீனாவின் யி சில்லிங் 502.9 புள்ளிகள் பெற்று தங்கப்பதக்கத்தை தட்டிச்சென்றார்.

சில்லிங்கைத் தொடர்ந்து போலந்து வீராங்கனை சில்வியா 502.2 புள்ளிகள் பெற்று வெள்ளிப்பதக்கத்தையும், சீன வீராங்கனை யூ டான் 501.5 புள்ளிகள் பெற்று வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

இந்த ஒலிம்பிக் போட்டியில் சீனாவின் யி சில்லிங் வென்றது தான் முதல் தங்கம் என்பது குறிப்பிடத்தக்கது.

## லண்டனில் புலிக்கொடி...

ஒலிம்பிக்கின் ஆரம்ப நாள் நிகழ்ச்சியில் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் கலந்து கொள்வார் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும், அவர் லண்டனுக்கு வரவில்லை என தெரியவருகிறது.

ஆரம்ப நாள் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பன்நாட்டுத்தலைவர்கள், பிரமுகர்கள் சென்ற பிரதான வீதியின் ஒரு மருங்கில் மாலை 5 மணியளவில் கூடத்தொடங்கிய மக்கள் பதாகைகளையும், தமிழீழ தேசியக் கொடிகளையும் தாங்கியவாறு கொட்டொலிகளை எழுப்பியபடி இரவு 8.30 வரை தமது போராட்டத்தை தொடர்ந்தனர். (விரிவான செய்தி 17 ஆம் பக்கத்தில்.) (ந-11)

## சம்பூரில் அணுமின் நிலை...

திகதி குறிப் பிடப்பட்டிருந்தது.

இது குறித்து அமைச்சர் சம்பிக்க ரணவக்க கூறுகையில், இத் தீவில் எங்குமே அணுமின்னிலையம் ஒன்றை அமைப்பதற்கு நாம் தீர்மானிக்கவில்லை.

அவ்வாறான திட்டத்திற்காக எந்தவெளி நாட்டுடனும் நாம் கலந்துரையாடவில்லை. இந்தியா ருடேயில் வெளியான செய்தி முற்றிலும் பொய்யானது என்றார்.

ஊடகங்கள் பொய்யான செய்திகளை வெளியிடக் கூடாது. குறிப்பாக பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள நிலையில் ஊடகங்கள் பொறுப்புடன்செயற்படவேண்டும்என அவர்தெரிவித்தார்.

கொழும்பு, கற்பிட்டி, திருகோணமலை, அம்பாந்தோட்டை ஆகிய இடங்களில் மின் விநியோக அபிவிருத்திக்கான எதிர்காலத்திட்டங்கள் உள்ளன இதற்கு நாம் எவரிடமும் அனுமதிப் பெறத்தேவையில்லை எனவும் அவர் தெரிவித்தார். (ந-11)

## 'இலங்கை...

மண்டபம் பகுதிக்கு வந்தனர்.

மண்டபம் காவல் படையினர் அவர்களை தமிழகத்துக்கு அழைத்து வந்தனர். 23 மீனவர்களுடன் அவர்கள் சென்ற 5 படகுகளும் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன.

இதனிடையே தாங்கள் இந்திய கடற்பகுதிக்குள் தான் மீன்பிடித்துக் கொண்டிருந்ததாகவும், இலங்கை கடற்படையினர் தான் இந்திய பகுதிக்குள் அத்துமீறி நுழைந்து தங்களது கழுத்தில் க்த்தி மற்றும் துப்பாக்கியை வைத்து தங்களுடன் வராவிட்டால் கொன்று விடுவோம் என மிரட்டி அழைத்துச் சென்றதாகவும், பின்னர் தங்களை கைகளில் விலங்கிட்டு நாய்களைப் போன்று நடத்தியதாகவும், கழிவறைகளிலேயே தங்க வைத்ததாகவும் அவர்கள் குற்றம்சாட்டியுள்ளனர். (ந-11)

## ஈழத்தமிழ...

தீர்க்கப்படவில்லை.

தமிழர்களுக்கு சம உரிமைகள் வழங்கப்படவேண்டும். இதையும் அவர்கள் இன்னும் செய்யவில்லை. இந்த விவகாரங்கள் தீர்க்கப்படாவிட்டால் இலங்கையில் எதிர்காலத்தில் மீண்டும் இன மோதல் புதி வடிவங்களில் வெடிக்கும்.

விடுதலைப்புலிகளுக்கு எதிராக 2000 ஆம் ஆண்டில் நடைபெற்ற போர், இராணுவத்திற்கு மிக மோசமாக அமைந்தது. அப் போது யாழ்ப்பாணப் பகுதியில் சிக்கிக்கொண்ட இராணுவ வீரர்களை பத்திரமாக வெளியேற்று வது தொடர்பாக இந்தியாவிடம் நோர்வேயே பேச்சு நடத்தியது எனவும் அவர் குறிப்பிட்டார். (ந-11)

## ஒலிம்பிக்...

ஈடுபட்ட இலங்கை சார்பான சிங்களப் போட்டியாளர்களை ஒலிம்பிக்கிலிருந்து நீக்க வேண்டும் என்று கோரி உலகத் தமிழர் பேரவை வலியுறுத்தியுள்ளது.

இந்த கோரிக்கையை அடுத்து, இலங்கை தமிழர் படுகொலையை உலக அரங்குக்கு எடுத்துச் செல்லும் வகையில் லண்டனில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்திவரும் சிவந்தனுக்கும் அந்தப் பேரவை ஆதரவளித்துள்ளது.

இது தவிர, இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ லண்டன் ஒலிம்பிக்கின் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொள்வதாக இருந்ததுடன், பிரித்தானிய வாழ் தமிழ் உணர்வாளர்களின் செயற்பாடுகளால் அது கைகூட வில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-11)

## மன்னார் நீத...

இந்த தாக்குதல் சம்பவம் குறித்து காவல் துறையினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இதேவேளை, மன்னார் நீதவான் தற்போது வசித்துவரும் வீட்டுக்கு விசேட அதிரடிப் படையினர் பாதுகாப்பு வழங்கி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

மன்னார் நீதவான் மீதான தொலைபேசி அச்சுறுத்தல் விவகாரம் குறித்து கடுமையான போர்ராட்டங்கள் நடைபெற்று வரும் இவ் வேளையில் அவரது வீட்டின் மீது இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் மேற்கொண்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. (ந-11)

## பாக்.அமை...

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸின் அழைப்பின் பேரில் ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் மூன்றாம் திகதிவரை பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் ஹினா ரப்பானி காரின் இலங்கைக்கு விஜயம் செய்வார் என வெளிவிவகார அமைச்சு முன்னர் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-11)


கடந்த 5 வருடங்களாக யாழில்
மகத்தான சேவையை வழங்கி வந்த
Rainbow Travels மீண்டும்
அதிகுறைந்த கட்டணத்தில் சகல
நாடுகளுக்குமான ஆகாய, கடல்
மார்க்கமான துரித பொதிகள், கடிதங்கள்,
ஆவணங்கள் சேவையை வழங்கி வருகிறது.



குறைந்த பட்ச கட்டணமாக 1kg - London - 1500/-
(3 நாட்களில் கிடைக்கும்) 1kg - Canada - 2600/-

முக்கிய குறிப்பு:-
விசேட குறைந்த விலைக் கட்டணத்துடன் 7 நாட்களில் கிடைக்கக் கூடியதாக
1kg - London - 500/-
1kg - Canada - 600/-

மேலதிக விபரங்களுக்கு:-
Rainbow Travels
No. 30/2 Third Lane,
Power House Road, Jaffna.
T.P:- 021 221 9596


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Advanced Microsoft Excel

அலுவலகங்களில் Microsoft Excel பாவிக்கும் பாவனையாளர்கள் உங்கள் வேலைப்பளுவைக் குறைத்துக் கொள்ள Excelஇல் உள்ள சில இலகுவான முறைகளைத் தெரிந்து கொண்டால் (Pivot table, VBA, What if analysis, Finance & Statistic Functions etc) உங்கள் நேரத்தை சேமித்துக் கொள்ள முடியும்.

உயர்தரப் படிப்பை முடித்துவிட்டு வேலைவாய்ப்புக் காகக் காத்திருக்கும் மாணவர்களுக்கும் இது ஒரு வாய்ப்பாக அமையும். உங்கள் தேவைகளுக்கு ஏற்ற வகையில் இலகுவான முறையில் கற்பிக்கப்படும்.

கோ.ஜனகன், தொ.பே.: 0776169470 (C-656)



## A/L வரலாறு - 2012

மாபெரும் கருத்தரங்கு

இடம் : D.M.I யாழ்ப்பாணம்
காலம் : 29.07.2012 (ஞாயிறு)
31.07.2012 (செவ்வாய்)
நேரம் : காலை 8 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை

வளவாளர்கள் :
M.பத்மன் B.A (HONS) HIS.SPL. MA (HISTORY)
S.சுஜிகரன் B.A (SL)
கட்டணம் : 350/-
(சி-624)



மாபெரும் விசேட விலைக்கழிவு

## Jet D Express Courier Service

விரைவு பாதுகாப்பு உத்தரவாதம்

உங்கள் உறவுகளுக்கு நீங்கள் அனுப்பும் பொருட்கள் 5 நாட்களில் சென்றடைய



| | | |
|---|---|---|
| France | Over5kg 1000/= | Over11kg 750/= |
| Germany | Over5kg 1100/= | Over 11kg 850/= |
| London | Over 5kg 1000/= | Over 11kg 750/= |
| Australia | Over 5kg 1100/= | Over 11lg 850/= |
| Netharland | Over 5kg 1100/= | Over 11kg 850/= |
| Swiss | Over 5kg 1500/= | Over 11kg 950/= |
| Denmark | Over 5kg 1200/= | Over 11kg 850/= |

Note: 25kg மேற்பட்ட பெதிகளுக்கு விசேட கட்டண சலுகை உண்டு

மேற்குறிப்பிட்ட நாடுகளுக்கு விசேட கட்டணச்சலுகையுடன் ஏனைய நாடுகளுக்கும் வழங்கப்படும்



Note : * கடலுணவு வகைகள் எல்லாவகையான பொருட்களும் அனுப்பிவைக்கப்படும் வெளிநாடுகளில் எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது.

இல 27, முதலாம் மாடி,
நவீன சந்தை. [தனம்ரெக்ஸ் மேல்]
யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 221 9150, 0772187 301

No: 77E. Manning Place,
Wellawatta, Colombo 06,
T.P:- 0112363873
0776509909
(சி-513)


# ராஜீவ் காந்தி-ஜெயவர்த்தன...

முன்னாள் தலைவருமான கேணல் ஹரிஹரன் எழுதியுள்ள ஆய்வு ஒன்றில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

1987ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29ஆம் திகதி ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இந்த உடன்படிக்கைக்கு இன்றுடன் 25 ஆண்டுகள் நிறைவடைகின்றன. இந்த உடன்படிக்கையின் ஊடாகவே இலங்கையின் அரசியல் யாப்பில் 13ஆம் திருத்தச் சட்டம் என்ற ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

இதன் ஊடாக மாகாணங்களுக்கான அதிகார பகிர்வு சிறுபான்மையினருக்கான தீர்வுகள் போன்ற பல்வேறு விடயங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. தற்போது இலங்கையில் யுத்தம் நிறைவடைந்து 3 ஆண்டுகள் கடந்துள்ளன. யுத்தம் நிறைவடைந்த பின்னரும் 13ஆம் திருத்தச் சட்டத்தின் சரத்துக்கள் அமுலாக்கப்படாமல் இருப்பதும், அதில் வலியுறுத்தப்பட்ட அதிகாரப் பகிர்வுகள் உள்ளிட்ட விடயங்கள் புறக்கணிக்கப்படுவதும் இந்த உடன்படிக்கை ஏற்படுத்திக் கொள்ளப்பட்டதன் இலக்கை அடையவில்லை என்பதை எடுத்துக்காட்டுகிறது.

அதேநேரம் இந்தியா இந்த உடன்படிக்கையில் தீவிரம் காட்டுகின்ற போதும், இந்தியாவின் பிராந்தியத்தில் உள்ள இலங்கை அதனை அமுலாக்க மறுத்து வருகின்றமையானது, பிராந்தியரீதியாக இந்தியாவின் செல்வாக்கு குறைந்து வருகிறது என்பதை சுட்டி நிற்கிறது.

எனவே இந்திய-இலங்கை உடன்படிக்கையினால் இலங்கைக்கான தீர்வும் கிடைக்கவில்லை என்பதுடன் இந்தியாவின் எந்த இலக்கும் நிறைவேற்றிக் கொள்ளப்படவில்லை எனவும் ஹரிஹரன் சுட்டிக்காட்டியுள்ளார். (ந-11)

# சீன அமைச்சரின் இல...

ராஜபக்ஷ உட்பட்ட பல முக்கியஸ்தர்களைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

அத்துடன், நாட்டின் முக்கியமான பல இடங்களிற்கும் அவர் விஜயம் செய்யவுள்ளார். இரு நாடுகளுக்கிடையிலான பாதுகாப்பு தொடர்பாடல்களை மேம்படுத்துதல், பரஸ்பரப் படைப்பயிற்சி ஒத்துழைப்புக்கள் உட்பட்ட பல விடயங்கள் குறித்து சீன பாதுகாப்பு அமைச்சர் தனது இந்த விஜயத்தின் போது பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

சீனப்பாதுகாப்பு அமைச்சரின் இந்த இலங்கை விஜயம் இந்தியாவை பெரும் அதிருப்திக்கு உள்ளாக்கியுள்ளது.

ஏற்கெனவே இலங்கையில் சீனாவின் தலையீடு குறித்து அதிருப்தி அடைந்து அது தொடர்பில் இராஜதந்திர ரீதியில் எதிர்ப்புக்களை வெளிக்காட்டிவரும் இந்திய அரசு, தற்போது சீனப்பாதுகாப்பு அமைச்சரின் வருகையால் கடும் சினமடைந்திருப்பதாக இச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனப்பாதுகாப்பு அமைச்சரின் இலங்கை விஜயம் தொடர்பான அதிருப்தியை எதிர்வரும் காலங்களில் இந்தியா இராஜதந்திர ரீதியில் வெளிப்படுத்தும் என இந்தியாவின் உயர்மட்ட ராஜதந்திர வட்டாரங்களிலிருந்து மேலும் அறிய முடிகின்றது. (ந-11)


## வேலையாட்கள் தேவை

சிறிலங்கா ரெலிக்கொமினுடைய வேலைத் திட்டத்திற்கு உடனடியாக வேலையாட்கள் சேர்த்துக் கொள்ளப்பட இருக்கின்றனர். கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு : 0779789341



## வின்ஸ்டார்

சிறந்த முதலீடு! மும்மடங்கு லாபம்!





ஐஸ்கிறீம் இயந்திரம்
ரூ 50,000 க்கு
மேல் மாத வருமானத்தைப் பெற
1 வருட உத்தரவாதம்
ரூ. 99,000 இலிருந்து
விற்பனையின் பின் சேவை
WITH PRE - COOLING & AIR PUMP



பொப்கார்ன் இயந்திரம்
ரூ. 29,000 இலிருந்து



ஜூஸ் இயந்திரம்
ரூ. 55,000 இலிருந்து

VISA

ATA 0112722990

WINRICH INTERNATIONAL (PVT) LTD
(Member of Pluss int.)
No. 18, Ground Floor, Lucky Plaza, St. Anthony's Mawatha, Kollupitiya, Colombo 03, Sri Lanka
தமிழில் தகவல்பெற (யோகேஸ்)
Hot Line: 077 391 8870 | 077 2015333



உலகின் முதல்த்தர கணனிக் கல்லூரி

aat SRI LANKA

Auto CAD கொழும்பின் பிரபல விரிவுரையாளர்

Tally Quick books Peachtree

Kids Cambridge, Oxford Press Books

Aptech COMPUTER EDUCATION Unleash your potential

0212219456 APTECH Computer Education, INDIA - Navalar Rd., Jaffna



ANDRA வின் ஆதரவில் மாபெரும் இசைநிகழ்ச்சி



யாழ்குடா நாட்டில் முதன் முறையாக
உலகத் தமிழர்களை தன் செல்லக்குரலால் வியக்கவைத்த
விஜய்TV ஜீனியர்-சுப்பர் சிங்கர் புகழ் பாடகி
அல்கா அஜித்துடன்
மற்றும்பல முன்னணிக் கலைஞர்கள் கலந்து கலக்கும்

அல்காவின் ஆனந்த ராகங்கள்

இன்று மாலை 3.00 மணிக்கு
யாழ் வீரசிங்கம் மண்டபத்தில்

அனுசரணை
யாழ் நகரில் விமான ரிக்கட்டுக்களை மலிவாக வழங்குவதுடன் மற்றும் வெளிநாட்டிலிருந்து துரித கதியில் பணத்தைப் பெற்றுக்கொள்ள
Aircom E Travels & Tours
இல.06, சிறாம்பியடி லேன், ஸ்ரான்லி வீதி அருகில் யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 2219113
WESTERN UNION | MMBL Money Master

ரிக்கற் கிடைக்கும் இடங்கள்
ANDRA டிஜிற்றல் இமேஜ் 0750404144
எயார்கொம் ரவல்ஸ் 021 2219113
• மண்டப வாயிலிலும்

திருமண அழைப்பிதழ்கள்
10%



ANDRA WEDDING CARDS
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (உதயன் பணிமனைக்கு அருகில்)
Tel : 0212228929, 0217200000
Mob : 0776622981, 0777481696.
• திருமண அழைப்பிதழ்களின் சாம்ராட்சியம்

நுழைவுச்சீட்டுக்கள் : 200/= 300/= 500/= மற்றும் V.I.P
Event Manegement : CEYLON ART CREATION


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.07.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org